பக்கங்கள்: XII + 08 – 20

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 01 புதன்கிழமை (14.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:049

# நீதிமன்றத் தீர்ப்பை அரசு ஏற்காவிடில் சட்டமில்லாத தேசமாக இது மாறும்!

## பிரதம நீதியரசர் ஆதங்கத்தோடு எச்சரிக்கை



கொழும்பு, ஜனவரி 14

**நீதிமன்றங்கள் வழங்கும் உத்தரவுகளை ஏற்று நடைமுறைப்படுத்தாமல், நீதிமன்றை அவமதிக்கும் வகையில் நிறைவேற்று அதிகாரமும் அரசும் நடந்துகொள்ளுமானால் நாடு சட்டம், ஒழுங்கு இல்லாத தேசமாகும் என நேற்றைய உயர்நீதிமன்ற அமர்வின் போது பிரதம நீதியரசர் சரத் என். சில்வா ஆதங்கத்தோடு எச்சரிக்கை செய்தார்.**

எரிபொருள் விலை தொடர்பாக சில வரையறைகளை விதித்து, பெற்றோலை லீற்றர் நூறு ரூபா என்ற அடிப்படையில் விற்பனை செய்யும்படி உயர்நீதிமன்றம் விடுத்த உத்தரவை மூன்று வாரங்கள் கடந்தும் நடைமுறைப் படுத்தாமல் அரசு உதாசீனப்படுத்தி விட்டது.

அந்த வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிரதம நீதியரசர் மேற்படி கருத்தைப் பகிரங்கமாக வெளியிட்டார்.

இந்த விடயம் தொடர்பான அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று மீண்டும் பிரதம நீதியரசர் சரத் என் . சில்வா, நீதியரசர்கள் கே.ஸ்ரீபவன், பி.ஏ. ரட்ணாயக்கா ஆகியோரைக் கொண்ட ஆயத்தின் முன்னால் எடுக்கப்பட்டது. (07 ஆம் பக்கம் பார்க்க)

## கிபிர் விமான ரயர் வெடித்து கட்டுநாயக்காவில் பரபரப்பு

கொழும்பு, ஜன 14

கொழும்பு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமானப்படையினரின் கிபிர் விமானத்தின் ரயர் வெடித்ததின் காரணமாக நேற்று நண்பகல் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்ட சில விமானங்கள் திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன.

எனினும், கிபிர் விமானத்திற்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று விமான நிலைய அதிகாரிகள் பின்னர் தெரிவித்தனர். (அ-சி)

## வரலாற்றில் கிடைத்திராத மாபெரும் யுத்த வெற்றி சுதந்திர நாளான பெப்ரவரி 4இல் கிடைக்குமாம்

### அரச தரப்பு திட்டவட்டமாகச் சொல்கிறது

கொழும்பு, ஜன. 14

நாட்டின் சுதந்திர தினமான பெப்ரவரி நான்காம் திகதி வரலாற்றில் என்றுமே கிடைத்திராத மாபெரும் யுத்த வெற்றி ஒன்று இந்த நாட்டுக்குக் கிடைக்கவுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.

அந்த வெற்றி என்னவென்று அறிய நாட்டு மக்களை ஆவலுடன் காத்திருக்குமாறு மேலும் கூறியுள்ளது அரசு.

கொழும்பில் நேற்று அரசால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் டளஸ் அழகப்பெருமவே இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

எமது அரசு எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலிலும் சரி, யுத்தத்திலும் சரி வெற்றிப்(08 ஆம் பக்கம் பார்க்க)




## மேலும் ஏழு பொதுமக்கள் வன்னித் தாக்குதலில் பலி!

கொழும்பு, ஜன. 14

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, விசுவமடு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி ஆகிய பகுதிகள் மீது நேற்று முன்தினமும் நேற்றும் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதல்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஏழு பேர் உயிரிழந்தனர். மேலும் இருபதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்று இணையத்தளங்கள் நேற்று செய்தி வெளியிட்டிருந்தன.

விசுவமடுப்பகுதி மீது நேற்று முற்பகல் 11 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் ஒரே குடும்பத்தை சேர்ந்த சுபாஸ்கரன் சுஜீதா (வயது - 13), சுபாஸ்கரன் சுஜீவா (வயது-17), சுமன் மயூரி மற்றும் இன்னொருவரும் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில் காயமடைந்தவர்கள் விசுவமடு மகா வித்தியாலயத்தில் இயங்கும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து தமிழர் விடுவிக்கப்படுகின்ற நாள் மிக விரைவில்!

### பொங்கல் செய்தியில் ஜனாதிபதி உறுதி



கொழும்பு, ஜன.14

பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து தமிழ் மக்கள் விடுவிக்கப்படும் நாள் மிகத் தூரத்தில் இல்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது தைப்பொங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

அச் செய்தியில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

, இரு விதங்களில் புனிதமாகக் கருதப்படுகின்ற இத்தினம் சிறந்த அறுவடையை எதிர்பார்த்தும் விவசாயிகள் தமது கடின உழைப்புக்குப் பின்னர் பெற்ற அறுவடைக்காகவும் அதை அளித்த சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் கொண்டாடப்படுகின்ற ஒரு பண்டிகையாகும்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## திருமாவளவன் சாகும்வரை உண்ணாவிரதம் ஈழத்தமிழருக்காக இன்று ஆரம்பிக்கிறார்



சென்னை, ஜன. 14

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் ஈழத்தமிழர்களுக்காக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

சேப்பாக்கம் விருந்தினர் மாளிகைக்கு முன்பாக இன்று இந்தப் போராட்டத்தை அவர் ஆரம்பிக்கின்றார்.

"அழிவின் விளிம்பில் 5 இலட்சம் தமிழர்கள். (08 ஆம் பக்கம் பார்க்க)

## சிவ்சங்கர் மேனன் வெள்ளியன்று ஜனாதிபதி மஹிந்தவுடன் சந்திப்பு

கொழும்பு, ஜன. 14

இலங்கைக்கு நாளை விஜயம் மேற்கொள்ளவுள்ள இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் இங்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுக்களை மேற்கொள்வார் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாளை கொழும்பு வந்து சேரும் சிவ்சங்கர் மேனன் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்து வட பகுதியின் தற்போதைய நிலைமை மற்றும் இரு தரப்பு விடயங்கள் குறித்துப் பேச்சு நடத்துவார் என அவை மேலும் குறிப்பிட்டுள்ளன.

மேனன் வெளிவிவகார அமைச்சர் (08 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி வைத்தியசாலைகளை பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனப்படுத்த கோரிக்கை

வவுனியா, ஜன. 14

வன்னியில் நிலவும் போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்துள்ள வைத்தியசாலைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அந்த வைத்தியசாலைகள் அமைந்துள்ள பகுதிகளை பாதுகாப்புப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என கிளிநொச்சி வைத்தியசாலைக்குழு ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

தாமதித்து வந்தாலும் தரமாகத்தான் தருவோம் தகவல் நாளை... (81752)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்.மத்திய கல்லூரியில் விவாதப் பயிற்சிப் பட்டறை

யாழ். மத்திய கல்லூரியில் கலை மாணவர் மன்றமும் விவாத மன்றமும் இணைந்து நடத்தும் விவாதப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாணவர்களின் தமிழ்ப் பேச்சாற்றலையும், விவாத ஆற்றலையும் வளர்க்கும் முகமாக மேற்படி விவாதப் பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது. (201)

## காணவில்லை

நேற்று (13.01.2009) செவ்வாய்க்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து புற்றளை, புலோலியில் உள்ள வீட்டிற்குச் சென்ற ஓய்வுபெற்ற புகையிரதத் திணைக்கள கணக்காளர் சுப்பிரமணியம் தம்பிராசா (வயது 81) வீடு வந்து சேரவில்லை.

இவரைப் பற்றி தகவல் அறிந்தோர் திருமதி கௌரி பஞ்சலிங்கம் (ஆசிரியை, புற்றளை, புலோலி) தொ.பே. 226 3776, 077 3618095 க்கு தகவல் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
திருமதி.கௌரி பஞ்சலிங்கம்
(ஆசிரியை).

## விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ். நகரில் பல முன்னணி கம்பனிகளின் ஏக விநியோகஸ்தராக இருக்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. வெளி மாவட்டங்களில் கடமையாற்றியவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

தொடர்பு: விளம்பர இல.5168,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

அம்பாள் கோவிலடி, அளவெட்டி வடக்கு என்னும் முகவரியுடைய தனபாலசிங்கம் சுதன் என்பவரின் தே.அ. அட்டை (831990511V), சாரதி அனுமதிப்பதிரம், விசேட அடையாள அட்டை என்பன சுன்னாகத்துக்கும் மல்லாகத்துக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1973 ஆம் ஆண்டு உத்தரம் 4 ஆம் பாதம், 4 செவ்வாய், கிரகபாவம் 54, லண்டன் P.R உடைய மணமகனுக்கு 1979 ஆம் ஆண்டுக்கு பின் பிறந்த கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நற்குணமும் ஆங்கில அறிவும் உடைய அழகிய மணப்பெண் தேவை.

தொடர்பு: விளம்பர இல.5167,
மே/பா உதயன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## திருத்தி வாசிக்கவும்

06.01.2009 ஆம் திகதி உதயன் பத்திரிகையின் 2 ஆம் பக்கத்தில் வெளியான திருமதி வைத்திலிங்கம் தங்கநாயகி என்பவரின் மரண அறிவித்தலில் அவரது பெயர் தவறுதலாக வைத்திலிங்கம் தங்கராணி என்று பிரசுரமாகியுள்ளது. அதனை வைத்திலிங்கம் தங்கநாயகி என்று திருத்தி வாசிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

## இன்று

உடுப்பிட்டி பகவதி அம்மன் ஆலயத்தில் தைப்பொங்கலை ஒட்டி இன்று காலை 8மணிக்கு சிறப்புப் பூசை நடைபெறவுள்ளது. அம்மன் பஜனை வழிபாட்டுடன் பஞ்சபுராணம் ஓதுதலும் இடம்பெறவுள்ளது. (201)

* * *

வட்டுக்கோட்டை- தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று தைப்பொங்கல் தினத்திலன்று திருமுறை ஓதலும் திருமந்திரம் பயனுடன் ஓதல் நிகழ்வும் ஆரம்பமாகவுள்ளன.

இந்நிகழ்வுகள் பிற்பகல் 4மணிக்கு தினமும் நடைபெறவுள்ளன. (201)

* * *

யாழ்ப்பாணம், ஜன. 14

அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் தைப்பொங்கல் தினமான இன்று பன்னிரு திருமுறைகள் முற்றோதல் பெருவிழா ஆரம்பமாகி தினமும் காலை பூசை நிறைவேறியதும் தொடர்ந்து ஓதப்படவுள்ளது. (201)

* * *

இனித இதயங்கள் என்ற அமைப்பு லயன்ஸ் கழகத்துடன் இணைந்து தைப் பொங்கலை ஒட்டி விசேட ஒன்றுகூடல் நிகழ்வை இன்று பிற்பகல் 2.30மணிக்கு மருதனார் மடம் வாழ்வகத்தில் நடத்தவுள்ளது.

அந்த அமைப்பின் தலைவரும் இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற முகாமையாளருமான சி.விக்னராஜா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (1)

### கோயிலுக்கெனச் சென்ற மாணவனைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜன.14

கொடிகாமத்தில் கோயிலுக்குச் செல்வதாகக் கூறி கடந்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்ட மாண வன் நேற்று வரை வீடு திரும்பவில்லை என்று அவரது சிறிய தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொடிகாமம், கச்சாய் வீதியைச் சேர்ந்த தியாகராசா நிறோஜன் (வயது 16) என்ற மாணவனையே காணவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1-25)

பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்வதற்கு சென்ற

## வெள்ளவத்தையில் வசித்த மகனைக் காணவில்லை என்று தந்தை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.14

கல்கிசை பொலிஸ் நிலையத்தில் பதிவு மேற்கொள்ளச் சென்ற தமது மகனை பத்து நாள்களாக அங்கு தடுத்து வைத்துள்ளதாக அவரது தந்தை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

கரவெட்டி மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த பூபாலசிங்கம் ஜோய் பிரகாஷ் வெள்ளவத்தை, பாமன் கடை லேனில் வசித்து வந்தார் என்றும் -

பொலிஸ் பதிவை மேற்கொள்வதற்காக இம்மாதம் நான்காம் திகதி கல்கிசை பொலிஸ் நிலையத்துக்கு சென்றார் என்றும் -

அங்கு அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது என்றும் - அவரது தந்தை அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (அ-1-25)

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி சிவானந்தன்



சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் கோபால் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவானந்தன் நேற்று (13.01.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அகல்யாவின் அன்புக் கணவரும் சரண்ராஜ், வைஸ்ணவி, லோஜினி, கிருசாந் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2009) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோபால் வீதி,
வண்ணார்பண்ணை. (81786)

தகவல்:
குடும்பத்தினர்.

### தாமோதரம்பிள்ளை சொக்கலிங்கம்



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சொக்கலிங்கம் நேற்று (13.01.2009) செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீகரனின் (லண்டன்) பாசமிகு தந்தையும் வசந்தியின் (லண்டன்) அன்பு மாமனாரும் சக்தி, சந்தோஷ் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தமூர்த்தி, நாகேஸ்வரி, குணம் மற்றும் குலசேகரபிள்ளை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை. (81786)

தகவல்:
ஸ்ரீகரன் (மகன்).

## மரண அறிவித்தல்

### தேவராஜா சாளினி (சாளி)

(க.பொ.த உ/தரம் 2008 வர்த்தகப் பிரிவு, யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்)



கொடிகாமம், கச்சாயைப் பிறப்பிடமாகவும் இல.67, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தேவராஜா சாளினி 12.01.2009 திங்கட்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் தேவராஜா - பிரேமரஞ்சினி தம்பதியினரின் அன்பு மகளும் நிரோஜித்தின் (யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்) பாசமிகு சகோதரியும் தெல்லிப் பழையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான டேவிட் - பாக்கியம் தம்பதியினர், கச்சாயைச் சேர்ந்த காலஞ்சென்ற அமிர்தநாதர் மற்றும் லூர்த்துமலர் தம்பதியினரினதும் அன்புப் பேர்த்தியும் புஸ்பராசா (இந்தியா), ஆனந்தராசா, காலஞ்சென்ற பிறேமாவதி மற்றும் பிறேமசாந்தி (நோர்வே), பிறேமிலா (லண்டன்) ஆகியோரின் பெறா மகளும் அமலோதயராணி, தேவதிரவியம், தேவதயாளன், தேவசகாயம் (இ.போ.ச, கோண்டாவில்), தேவநேசன் (இ.போ.ச, கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.01.2009) வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு மத்தியூஸ் வீதியில் அமைந்திருக்கும் அவரது இல்லத்தில் இருந்து யாழ். புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின் யாழ். புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.67, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (81787)

தகவல்:
அ.தேவராஜா (தந்தை).


அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம் இதயம்
கனிந்த பொங்கல்
நல்வாழ்த்துக்கள்

Pongal Promotion...

Pentium 4 Computer
Intel 1.8Ghz Celeron
Biostar 965 DDR11 Mother Board
40GB Sata HDD
1GB DDR11 800Mhz Ram
Asus CD Rom
ATX Black Casing
15" Black CRT LG Monitor
Key board
Optical Mouse
FREE
Pendrive
Mouse Pad, Duest Cover
37,000/=

Pentium 4 Computer
Intel 2.2Ghz Dualcore Processor
Foxconn G31 Mother Board
160GB Sata HDD
1GB DDR11 800Ghz Ram
Sony DVD Writer Sata
ATX Handle Black Casing (500W)
15" LCD Monitor
Keyboard
Opitical Mouse
FREE
Pendrive
Mouse Pad, Duest Cover
47,000/=

Pentium 4 Computer
Intel 2.2Ghz Dual Core Processor
Foxconn G31 Mother Board
160GB Sata HDD
1GB DDR11 800Ghz Ram
17" LCD Monitor
ATX Handle Black Casing (500W)
Asus DVD R/W Lightscribe
Multimedia Keyboard
Opitical Mouse
FREE
Pendrive
Mouse Pad, Duest Cover
49,000/=

Pentium 4 Computer
Intel 2.2Ghz Dual Core Proceesor
Asus P5GCMX/GBL Mother Board
160GB Sata HDD
1GB DDR11 800Ghz Ram
17" LCD Monitor
ATX Handle Casing(500W)
Asus DVD R/W Lightscribe
Multimedia Keyboard
Opitical Mouse
FREE
Pendrive
Mouse Pad, Duest Cover
49,500/=

Pentium 4 Computer
Intel 2.2Ghz Dual Core Procssor
Intel DG31 Mother Board
160GB Sata HDD
1GB DDR11 800Mhz Ram
16" LCD Monitor
ATX Handle Black Casing (500W)
Sony DVD Writer Sata
Multimedia Keyboard
Opitical Mouse
FREE
Pendrive
Mouse Pad, Duest Cover
50,000/=

Pentium 4 Computer
Intel 2.2Ghz Dual Core Proceesor
Intel DG31 Mother Board
160GB Sata HDD
1GB DDR11 800Mhz Ram
19" LCD Multimedia Monitor
ATX Handle Casing(500W)
Sony DVD Writer Sata
Multimedia Keyboard
Opitical Mouse
FREE
Pendrive
Mouse Pad, Duest Cover
56,000/=

OFFER VAILD FOR 11.01.2009 -16.01.2009
Warrenty 1 - 3 Years
MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, கபாலசெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)



அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
எல்லா இல்லங்களிலும் புத்தரிசி பொங்கட்டும்!
உங்கள் அந்தியகால நண்பன்
நவீனரக பெட்டிகள், எம்பாமிங், பிரேத ஊர்திகள்
மற்றும் மலர் வளையங்கள் அனைத்துக்கும்
கிளின்ரன் அந்தியகால சேவை
548, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 3518.



கிறிஸ்மஸ் முதல்
முதன் முறையாக
யாழ்.மாவட்டத்தில்....
மாபெரும்
பரிசுகளுடன்
விரையுங்கள்....
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும்
அதிகூடிய பங்குலாபம்
கிறிஸ்மஸ் மற்றும்
புதுவருடத்தினை முன்னிட்டு
சிறிலங்கா இன்சூரன்ஸ்
MAK Cost Cutter Super Market
உடன் இணைந்து நடாத்தும் மாபெரும் விற்பனைத் திருவிழா
18.12.2008 முதல் 18.01.2009 வரை
You are Safer with the Leader
என்றுமே இல்லாதவாறு குறைந்த கட்டுப்
பணத்தில் கூடிய காப்புறுதித்தொகை
பொங்கல் வரை
உங்களின்
காலாவதியான காப்புறுதிப்
பத்திரங்களை புதுப்பிக்க
ஓர் சந்தர்ப்பம்
(நிபந்தனைகளிற்குட்பட்டது)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் பிரார்த்தனை

இன்று தைத்திங்கள் முதல் நாள். தைப்பொங்கல் திருநாள்.

மார்கழிப் பெண்ணுக்கு. விடை கொடுத்து, தைப் பாவை எனும் தையல் நடைபோடத் தொடங்கும் தலைநாள் இன்று.

இந்நாளையே உழவர் திருநாளாக உவகையுடன் கொண்டாடுவர் தமிழர். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற உயரிய எண்ணத்துடன் வாழும் தமிழர்கள், உழைப்பவர் பெருநாளாகிய இன்றைய தினத்தை உவந்து போற்றிக் கொண்டாடுவதில் வியப்பில்லை.

இயற்கையோடு இயைந்து வாழும் தமிழர்கள், மதம் கடந்து மாட்சிமையோடு அனுஷ்டிக்கும் மாண்புமிக்க தினம் இப்பொங்கல் திருநாள். அதில் அர்த்தங்கள் ஆயிரம் உள்ளன.

உலக இயக்கத்தின் மூல காரணன் சூரியன். அவனே சக்தியின் மூலம். அவனின்றி அணுவும் அசையாது. அவனுக்கு அவனி படைக்கும் நன்றிப் பொங்கலே தைத்திருநாள் சிறப்பாகும்.

சூரியனின் சக்தி தாவரங்கள் ஊடாகவே உலகில் பதிக்கப்படுகின்றது. உணவுச் சங்கிலியின் ஆரம்பத்தில், சூரியனிலிருந்து சக்தியைப் பூமியில் பதிக்கும் தாவர வர்க்கங்களுக்கே முதலிடம் கொடுக்கிறது நவீன விஞ்ஞானம்.

இந்த விஞ்ஞான தத்துவத்தைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழன் நன்கு புரிந்து கொண்டிருந்தான். அதனால்தான் சக்தியின் மூலத்தை சுவீகரித்து, தம் விளைச்சலாகப் பச்சைத் தாவரங்கள் உலகுக்குத் தரும் நல்வேளையை, உலக இயக்க காரணனான சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் திருநாளாக அவன் தேர்ந்தெடுத்தான்.

உலகை ஆகர்ஷித்து ஆதரிக்கும் ஆதவனுக்கும், நமது உயிர்வாழ்வுக்கும் உயர்வாழ்வுக்கும் உற்ற உதவிகளை வழங்கி உறு துணையாக அமையும் ஆவினங்களுக்கும் நன்றி படைக்கும் பொங்கல் திருநாள்களை இக்காலத்தில் தமிழர் தேர்ந்ததில் சிறப்புண்டல்லவா?

தமிழர்களைப் பொறுத்தவரை தை முதல்நாளே தமிழ்ப் புத்தாண்டு. தமிழக அரசு இதற்கு சட்ட வடிவம் கொடுத்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

ஒரு நாளை ஆறு பொழுதுகளாகவும் அறுபது நாழிகைகளாகவும் தொகுத்த தமிழர்கள், ஓராண்டை ஆறு பருவங்களாகவும் வகுத்தனர். இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்ற இந்த ஆறு பருவங்களில் முன்பனி, பின்பனிக் காலங்களின் நலிவுகள் மறைந்து, புது விளைச்சலோடு உற்சாகம் பொங்கப் பிறக்கும் இளவேனிலை புதுவாழ்வுக்குரிய காலமாகக் கொண்டான் தமிழன்.

இன்றைய பொங்கலுக்கு முதல் நாள் போகி. கடந்த ஆண்டைப் போக்கிய நாள் அது. இப்போது - இன்று - பொங்கி வருவது தமிழர் புத்தாண்டு.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையில் வாழ்பவன் தமிழன்.

ஆனால் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்று பிறக்கும் தைத்திருநாள் நம்பிக்கை தருவதாக அவர்களுக்கு இல்லை. ஏமாற்றத்தோடு போன கடந்த ஆண்டைக் கடந்து, ஏக்கத்தோடு புத்தாண்டைத் தொடருகின்றனர் அவர்கள்.

தமிழரை வழிநடத்துபவன் சூரியக் கடவுளே. அந்த உதயனின் தேர்ச்சக்கரம், தமிழரின் தேசத்தை உதய திசையை நோக்கி - விடிவுப் பாதையை நோக்கி - நெறிப்படுத்துமா என்ற ஏக்கத்தில் இன்று திகைத்து நிற்கின்றான் தமிழன்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் பேராபத்தை எதிர்நோக்கி நிற்கும் தமது நான்கு லட்சம் உறவுகள் குறித்து பெரும் பதைபதைப்பில் தடுமாறுகிறது ஈழத் தமிழினம்.

போர் மேகங்களும் ஆக்கிரமிப்பு அவலங்களும் தமிழர் தாயகத்தைக் கவிந்து சூழ, பேரழிவும் போரழிவுமே வாழ்வின் நிதர்சனங்களாய் கவ்வ, ஏதிலிகளாய் அலையும் ஈழத் தமிழினத்துக்கு தை பிறந்தாலும் வழி பிறக்குமா என்ற ஏக்கமே நெஞ்சில். எதிர்காலம் சூட்சுமம் நிறைந்த சூனியமாய் - ஏமாற்றம் கொண்ட வெறுமையாய் - நிச்சயமற்ற அவமாய் - பரிணமித்து நிற்பது போன்ற மாயை நிலைமை. தோல்விகள், இழப்புகள், துன்பங்கள், துயரங்கள், துரோகங்கள், நாசங்கள், நலிவுகள் என்று மனமொடிந்த நிலையில் பற்றுக்கோடின்றித் தடுமாறுகிறது தமிழர் தம் வாழ்வு. களமும் புலமும் கவலையில் தோய்ந்து கிடக்கின்றன.

உறுதியின் உறைவிடமாக இருந்த சத்திய வேட்கை, தமிழர் தம் மனதில் தடுமாற்றத்தைத் தந்து நிற்பது கண்கூடு.

இந்தத் தடைகளையும், அழுத்தங்களையும், பொறிகளையும், வியூகங்களையும் துணிவோடு சளைக்காமல் எதிர்கொண்டு தமிழினம் மீண்டும் வெற்றியோடு வெகுண்டெழ - பின்னடைவுகளில் இருந்து புத்துயிர்ப்புப் பெற - தைப்பிறப்போடு வழி பிறக்க வேண்டும்.

அதுவே, விரிந்து கிடக்கும் பூமிப்பந்து எங்கும் பரந்து வாழும் தமிழர்களின் தைத்திருநாள் பிரார்த்தனையாகும்.

### வன்னி மக்களின் துயரங்களைக் கருத்திற் கொண்டு

# பொங்கல் கொண்டாட்டங்களை நிறுத்துவதாக புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் அறிவிப்பு

விமான மற்றும் ஷெல்த் தாக்குதல்கள் காரணமாக வன்னியிலே மக்கள் தாங்கொணா வேதனையை அனுபவிப்பதால் பொங்கல் திருநாள் கொண்டாட்டங்கள் அனைத்தையும் நிறுத்துவதாகப் புலம்பெயர் ஈழத்தமிழர் அமைப்புகள் அறிவித்துள்ளன.

இது குறித்து அமெரிக்கா, ஐரோப்பிய, அவுஸ்திரேலியாப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் அறிவித்துள்ளனர்.

இது அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளவை வருமாறு:

வன்னியிலுள்ள தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா இராணுவத்தின் இன அழிப்புத் தாக்குதலைத் தடுக்கக்கூடிய அழுத்தம் தமிழ்நாட்டிலிருந்து மட்டுமே வர முடியும். சிறிலங்காவினால் நடத்தப்படும் இனத்தேசியப் போரானது புது டில்லியின் மூலோபாயத்திலும் அதன் உலகப் பங்காளிகளின் தந்திரோபாயப் பங்களிப்புடனும் முன்னெடுக்கப்படுகி றது.

தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்தின் மீது கொண்டிருந்த மிகச்சிறிய நம்பிக்கையையும் இழந்துவிட்டனர். சிறிலங்காப் படைகள் கிளிநொச்சியை ஆக்கிரமித்த பின்னர் அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளே அவர்களையும் அவர்களது புவிசார், நலன்சார் செயற்பாடுகளையும் அம்பலப்படுத்தி விட்டன.

அகோர போர் நடவடிக்கையால் வன்னியிலே மக்கள் தாங்கொணா வேதனையை அனுபவிப்பதால் பொங்கல் திருநாள் கொண்டாட்டங்கள் அனைத்தையும் நிறுத்துவதாகப் புலம்பெயர் ஈழத்தமிழர் அமைப்புகள் அறிவித்துள்ளன.

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.14

அரசசேவைப் பட்டதாரிகளுக்கான பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அரச சேவையில் உள்ள அபிவிருத்தி உதவியாளர்கள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு அரச சேவைப் பட்டதாரி அலுவலர் சங்கம் அறிவித்துள்ளது. (201)

* * *

யாழ்ப்பாணம், ஜன.14

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வலி.கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்காலிகமாக வசித்துவரும் விவசாயிகளுக்கான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டம் வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரணச்சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் விவசாயிகளுக்கான நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறவுள்ளது. மேற்படி தெரிவு செய்யப்படும் நிர்வாக சபையினூடாக விவசாயிகளுக்கான பயன்களை அரசாங்க மூலம் பெற்றுக்கொள்வதன் காரணமாக இக்கூட்டம் நடைபெறவுள்ளதாக மேற்படி சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (201)

* * *

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் இவ்வாண்டுக்குரிய உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு பின்வரும் ஆவணங்களான பாடசாலையில் கடமைப் பொறுப்பேற்ற கடிதம், வேலைத் திட்டம், பாடக்குறிப்பு, பதிவுக் கையேடு, மீள்நோக்குக் கையேடு ஆகியவற்றுடன் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களை சமுகமளிக்குமாறு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (201)

# விவசாயிகளின் ஒய்வூதியத்தை அதிகரித்து வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.14

2009 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவின் ஊடாக விவசாயிகளின் ஓய்வூதியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. அத்துடன் ஓய்வூதியத் தொகையும் அதிகரித்து வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் சிறிமாலி அதாவுட ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட தேசவள விவசாய சமாசத் தலைவர் சி.பொ.வ.மா.க.முதலியாருக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது விவசாயிகளுக்கு அடிப்படையாக வழங்கப்பட்டு வரும் ஆயிரம் ரூபா - மூவாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்.

1995இல் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பின்னர் 13 வருடங்களின் பின்னர் இத்திட்டத்திற்கு புத்துயிர் அளிக்கப்பட்டு ஓய்வூதியம் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த அதிகரிப்பிற்கான முழு நடவடிக்கையினை விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சு எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

அகில இலங்கை ரீதியில் உள்ள விவசாய ஓய்வூதியர்களின் அடிப்படைத் தொகை 1000 ரூபாவில் இருந்து 3000 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் எனும் கருத்திட்டக் கடிதத்தை - யாழ். மாவட்ட தேசவள விவசாயிகளின் சமாசத் தலைவர் 29.09.2008 அன்று விவசாய நீர்ப்பாசன அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் கவனத்திற்குக் கொண்டு வந்தமை தெரிந்ததே. (202-95)

## நாளை

| | |
|---|---|
| தை2 | 15.01.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | பி.இ. 01.51வரை |
| நட்சத்திரம்: | பூரம் |
| | பி.ப.04.50வரை |
| சுபநேரம்: | 08.04 - 09.34 |
| ராகுகாலம்: | 02.04 - 03.34 |

## சமூக நலத்துறைப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், ஜன.14

வடமாகாண சமூக நலத்துறை பணிப்பாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ளார்.

இவர் யாழ்.மாவட்ட சமூக சேவைகள் மற்றும் சிறுவர் நன்னடத்தை தொடர்பான செயற்பாடுகளை நடப்பாண்டில் சிறப்பாக முன்னெடுப்பது தொடர்பான செயற்பாடுகள் குறித்துக் கவனஞ் செலுத்துவார். (202-72)

## நாவற்குழி அரச களஞ்சியத்தில் லக்ஸ்பிறே விற்பனை

யாழ்ப்பாணம், ஜன.14

தற்போது நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்திலுள்ள 400 கிராம் லக்ஸ்பிறே முழு ஆடைப் பால்மா 250 ரூபாவாக விலைக்குறைப்புச் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

இப் பால்மாவைப் பெற்றுக் கொள்வதற்கு விருப்பம் கொண்டுள்ள ப.நோ.கூ.சங்கங்கள் அதற்கான வழங்கற்கட்டளையை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும்- இப்பால் மாவினை பெற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவிக்கும் தனியார் வர்த்தக நிறுவனங்கள் உணவக உரிமையாளர்கள் இதற்கான வழங்கற்கட்டளையை பிரதேச செயலர் அல்லது உதவி அரசாங்க அதிபர் சிபாரிசுடன் 19ஆம் திகதியிலிருந்து யாழ்.செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும்-அறிவிக்கப்பட்டுள்ளது. கொள்வனவுக்கான பணம் உடன் செலுத்தப்பட வேண்டும் என அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார். (202)

## போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத சடலம்

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயினால் மரணமான ஒருவரின் சடலம் உரிமை கோரப்படாத நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி மருதனார்மடம் புற்றுநோயாளர்கள் காப்பகத்தில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வீரசிங்கம் மகேஸ்வரி (வயது 54) என்பவர் அனுமதிக்கப்பட்டார். பின்னர் சிகிச்சை பயனளிக்காமல் அவர் இறந்துள்ளார். இவரது சடலம் நேற்றுவரை உரிமை கோரப்படாத நிலையில் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (202)

# துப்பாக்கிச்சூட்டில் பலியான 7 பேரின் சடலங்கள் திங்களன்று வவுனியாவில் அடக்கம்



கொழும்பு, ஜன.14

கடந்த சனிக்கிழமை அதிகாலை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தபோது ஊரியான் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் உயிரிழந்த 7 பேரின் உடல்களும் கடந்த திங்கட்கிழமை வவுனியா பூந்தோட்டம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

3 வயதுக் குழந்தை உட்பட இரண்டு சிறுவர்கள் அடங்கலாக 7 பேரின் சடலங்களும் வவுனியா வைத்தியசாலையில் வைத்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு, அரச அதிகாரிகளின் உதவியோடு நல்லடக்கத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஒரே குழியில் 7 பேரின் சடலங்களும் அடக்கம் செய்யப்பட்டன.

இந்த இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக இறந்தவர்களின் உறவினர்கள் 35 பேர் 'மனிக்பாம்' இடைத்தங்கல் முகாம், நெடுங்குளம் இடைத்தங்கல் முகாம் என்பவற்றில் இருந்து அதிகாரிகளினால் அழைத்துவரப்பட்டிருந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்போடப்பட்டுள்ளது

திருவருள் மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் கட்டட நிதிக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தைப்பொங்கல் தினமான இன்று (14.01.2009) அதிஷ்டம் பார்க்கப்பட இருந்தது. இந்த அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோயில் நிர்வாகத்தினர்,
சுதுமலை தெற்கு
திருவருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(81772)

## சங்காபிஷேகம்

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த சங்காபிஷேகம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (202-72)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 28 ★ 08 ★ 1945



ஆண்டவன் திருவடியில் 15 ★ 12 ★ 2008

### அமரர் பாலு அமிர்தராஜா
(ரிங்கர் ரத்தினம்)

ஆலமர விழுதுகளாய் அன்பின் உறைவிடமாய்
எங்கள் குலத் தலைவனே எங்கள் அன்பின் வடிவனே
அன்பின் உருவான நாயகனே எங்கள் இதயத் தெய்வமே
பாசத்தின் பிறப்பிடமே என்றும் ஆனைநூர் மண்ணின்
வேராக கொடை கொண்ட வள்ளலே நீ வருவாயா மீண்டும்
இம் மண்ணில் பிறக்க மாட்டாயா !
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

கடந்த 15.12.2008 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீரஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் ஆறுதல் கூறி உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (14.01.2009) நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பொலிஸ் நிலையம்
பழம் றோட்,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.
தகவல்: வே.கதிரமலை

(81730)


Direct Start 2009

புத்தாண்டில் உங்கள் முதல் முதலீடு... கம்ப்யூட்டர் கல்விக்காக இருக்கட்டும். அதுவும் தரமான ASIAN - CSC உடன் தொடங்கட்டும்.

New Year 2009 Special Offer

Jan-15 முதல் புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் ஆரம்பம் ...

டிப்ளோமா கற்கைநெறிகள்

- Diploma in Ms Office 2007
- Diploma in Web Design
- Diploma in Desktop Publishing
- Diploma in Computerised Accounting
- Tally Accountancy Training

Tally ies 9.0

Duration : 3 months for all courses

After O/Level what next ?



Registered with Ministry of Tertiary & Vocational Education Commission

ASIAN- CSC COMPUTER EDUCATION

26, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
Tel :021 222 5677

கிளை : கொடிகாமம் வீதி, நெல்லியடி
Tel :077-3122198


## வல்வெட்டித்துறையில் இலங்கைவங்கியின் புதிய கிளை

கரவெட்டி, ஜன.14

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் இலங்கை வங்கிக் கிளை ஒன்று வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வல்வெட்டித்துறை பிரதேச மக்களின் நன்மை கருதி இலங்கை வங்கியினர் விரைவில் வங்கிக்கிளை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

மேற்படி கிளைக்காக விஷ்ணு சுந்தரத்தின் கட்டடம் வல்வை சிவபுர வீதிக்கு அண்மையில் தெரிவு செய்யப்பட்டு ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

விரைவில் மக்கள் சேவைக்காக வங்கி ஆரம்பிக்கப்படுமென வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம்தெரிவித்தார். (202-70)


IBMS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

ஆரம்பம்
பிரிவு 3: 17.01.2009
பிரிவு 4: 21.01.2009
காலை 10.00 மணி

அனைவருக்கும் கணனிக்கல்வி என்னும் நோக்கில் குறைந்த கட்டணத்துடன் நிறைந்த சேவையை வழங்கிவரும் IBMS நிறுவனத்தில் இணைந்து, நீங்களும் குறுகிய காலத்தில் கணனிக் கல்வியில் வல்லுநராகலாம்

Courses
1.Dip.in Microsoft office
2.Dip.in Desk Top Publishing
3.Dip.in Internet Techonology
4.Dip.in Hardware Technology
5.Dip.in Computerized Accounting
6.Diploma in Video Editing



2008 O/L
பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே! உங்களுக்காகவே புதிய பிரிவுகள் ஆரம்பம். உங்கள் பரீட்சைப்பெறுபேறு வரும் வரையுள்ளபொன்னான காலத்தை IBMS உடன் இணைந்து பயனுள்ளதாக்கிக்கொள்ளுங்கள்.

குறைந்த கட்டணத்துடன் கணனிக்கல்வியில் வல்லுனராகும் சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
#209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 8232 Fax: 021 222 6933
கிளைகள் :- நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி, சங்கத்தானை சாவகச்சேரி.


## நீங்காத நினைவில் .... ஒன்பதாம் ஆண்டு அஞ்சலி



### முதலி பகீர்தன்
(பருத்தித்துறை நகராட்சி மன்ற ஊழியர்)

மலர்வு: 01.09.1974
உதிர்வு: 14.01.2000

அழியாத உன் நினைவலைகள்
அணையாத தீபமாய் எம் இதயத்தில்
என்றென்றும் ஒளி வீசும் ...

புலோலி மத்தி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.


COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250
Branch : #07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள்
மாபெரும் கட்டணக்கழிவுடன் ஆரம்பமாகின்றது

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் - 2008 80%OFF

நெல்லியடியிலும் நடாத்தப்படும்

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 3 Months 1500/= | Diploma in Desktop Publishing 4 Months ~~10000~~ 2000/= | Diploma in Web Page Designing 3 Months ~~10750~~ 2150/= |
| Diploma in Graphic Designing 4 Months ~~10750~~ 2150/= | Diploma in Hardware Engineering 3 Months ~~10000~~ 2000/= | Diploma in Auto CAD 3 Months ~~10000~~ 2000/= |
| Diploma in Accounting Package 3 Months ~~10750~~ 2150/= | Diploma in Computer Science 4 Months ~~10750~~ 2150/= | Honors Diploma in Computer Science 3 Months ~~13000~~ 2600/= |

50% Off Advance Courses

| | |
|---|---|
| Dip. in. Multimedia | 2750 |
| Dip. in. Video Editing | 3250 |
| Dip. in. Networking | 5000 |

Computer Express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும் சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வரையறையற்ற செய்முறைப்பயிற்சி.

யாழ்நகரில் ஆரம்பம்
Batch I: 16/01/2009 -01PM
Batch II: 17/01/2009 10AM 03PM
Batch III: 18/01/2009 10AM 03PM
Batch IV: 19/0[illegible]

நெல்லியடியில் ஆரம்பம்
Batch I: 15/01/2009 - 09AM
Batch II: 17/01/2009 - 10AM
Batch III: 18/01/2009 - 10AM


## மூன்றாம் ஆண்டு நினைவு தினம்



பிறப்பு 1950.01.18
இறப்பு 2006.01.14

### அமரர் ஆறுமுகம் கார்த்திகேசன் (செல்வராஜா)

அப்பா!
இதயத்தில் கனக்கும் நினைவுகள்
இமைகளில் ஈரமாய் கசிகின்றன - உம்
அன்பை இழந்து ஆண்டுகள் மூன்று ஆனாலும்
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவு அழியாது.

இல.60, மெயின் [illegible] வீதி, [illegible]

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிப்பாரின்றிக் கிடக்கும் காணிகள் மூலம் நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு

## கவலை வெளியிடுகின்றார் மாநகர ஆணையாளர்

நல்லூர்,ஜன.14

கவனிப்பாரின்றிக் கிடக்கும் தனியார் காணிகளில் கிடக்கும் கழிவுப் பொருள்களால் நுளம்புப் பெருக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சிக்கின்குனியா போன்ற தொற்றுநோய்கள் ஏற்பட சாத்தியமுண்டு.

இவ்வாறு கவலை தெரிவிக்கின்றார் யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ.

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் நுளம்புகளின் பெருக்கம் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் கவனிப்பாரின்றிக் கிடக்கும் தனிப்பட்டவர்களின் காணிகளில் பற்றைகள் அதிகரித்துக் காணப்படுகின்றது. அங்கு கிடக்கக்கூடிய தகரப் பேணிகள், கோம்பைகள் போன்ற கழிவுப் பொருள்களில் மழைநீர் தேங்கிக் கிடக்கும் வாய்ப்புகள் உள்ளன. இதனால் சிக்கின் குனியா போன்ற நோய்களைப் பரப்பக் கூடிய நுளம்புகளின் பெருக்கம் ஏற்பட வாய்ப்புகள் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

அநேக காணிச் சொந்தக்காரர்கள் தற்போது இங்கு இல்லாதநிலையில் அவர்களின் காணிகளைப் பராமரிப்போர் தங்கள் பொறுப்பில் உள்ள காணிகளின் பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்யும் பட்சத்தில் நுளம்புப் பெருக்கத்தைத் தவிர்க்கமுடியும் என்றும் நகரப்பகுதி மக்களுக்கு ஆலோசனை கூறுகின்றார். (202-111)

# கோப்பாய் மத்தியில் பட்டப்பகலில் திருட்டு

கோப்பாய்,ஜன.14

கோப்பாய் மத்தி அரசினர் மருத்துவமனைக்கு அண்மையில் உள்ள வீட்டில் பட்டப்பகலில் ஓடு பிரித்து ஒரு லட்சம் ரூபா பணம் மற்றும் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன.

கடந்த சனி பகல்வேளையில் வீட்டிலுள்ளவர்கள் வெளியில் சென்ற தருணம் பார்த்து உள்நுழைந்த திருடர்கள் கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர். (202-72)

# பருத்தித்துறையில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு

வடமராட்சி,ஜன.14

பருத்தித்துறை - புலோலிப் பகுதியில் மண்ணெண்ணெய்க்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்பட்டு வருகின்றது.

மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் மண்ணெண்ணெய் விளக்குகளின் பாவனையும், விறகுத் தட்டுப்பாடு காரணமாக சமையலுக்கு மண்ணெண்ணெய் குக்கர்களின் பாவனையும் வெகுவாக அதிகரித்துள்ளன.

புகையிலை, வெங்காயம் மற்றும் மேட்டு நில காய்கறிப் பயிர்ச்செய்கைகளுக்கு நீரிறைக்கும் இயந்திரத்துக்கு மண்ணெண்ணெய் பெருமளவில் பயன்படுத்தப்படுவதாலும் மண்ணெண்ணெய் பாவனை வெகுவாக அதிகரித்துள்ளது.

இங்குள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும், கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் மண்ணெண்ணெய் விநியோகம் அடிக்கடி தடைப்படுகின்றது. இதேபோல் தனியார் எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு இடையிடையேதான் மண்ணெண்ணெய் வந்து சேர்கின்றது.

இதனால் பாவனையாளர்கள் மண்ணெண்ணெய்யைத் தாராளமாகப் பெறமுடியாது சிரமப்பட்டு வருகின்றனர். (202-236)

## எப்போதும் நீர்மட்டம் குறையாத

# நரிக்குண்டு, பொக்கணைக் கிணறுகள் விரைவில் புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.14

நவாலியின் நரிக்குண்டு, பொக்கணைப் பிரதேசங்களில் உள்ள எப்போதும் நீர்மட்டம் குறையாத 2 கிணறுகளும் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பாவனையின்றி இருக்கும் இந்த இரண்டு நன்னீர் கிணறுகளின் நீர்மட்டம் எப்போதும் குறையாமல் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இக்கிணறுகளைப் புனரமைத்து நவாலி மற்றும் வலி.வடக்கு, வலி.கிழக்குப் பிரதேச மக்களுக்குக் குடிதண்ணீரை வழங்க முடியும் என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (202-224)

# கோப்பாய்ப் பிரதேசத்தில் பாதீனியம் அழிப்பு

கோப்பாய்,ஜன.14

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவின் கிராம அலுவலர் பிரிவுகளில் நல்லூர் றோட்டறிக்கழக ஆதரவுடன் அப்பிரதேச விவசாயச் சம்மேளனங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் உதவியோடு பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக நேற்றைய தினம் பிரதேச செயலக வளாகச் சூழலில் இருந்த பாதீனியக் களைகள் பிடுங்கி, எரியூட்டி அழிக்கப்பட்டன. (202-72)

# வாதரவத்தையில் புதிய நீர்த்தாங்கி; இதன்மூலம் மக்களுக்குக் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம்,ஜன.14

தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபை வாதரவத்தை பகுதியில் பத்தாயிரம் லீற்றர் கொள்ளக்கூடிய நீர்த்தாங்கியை அமைத்துள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் இந்த நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு இப்பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த நீர்த்தாங்கியில் இருந்து குழாய் மூலம் மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

நிலாவரைக் கிணற்றுக்கு அருகில் சபையினரால் அமைக்கப்பட்டிருக்கும் நன்னீர் குழாய்க்கிணறு வழியாக இந்தத் தாங்கியில் நீர் சேமிக்கப்பட்டு அதனூடாகக் குழாய் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-224)

# பொங்கல் விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.நகர் சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் பட்டிப் பொங்கல் கோமாதா உற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குப் பசுக்கள் இடபங்கள் பாதுகாப்பு இணைய உபதலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டிப் பொங்கல் விழாவில் சிறப்புரைகளும் விசேட உரைகளும் இடம் பெறவுள்ளன. (201)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.14

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தீவகப் பிரதேசத்திற்கான தைப் பொங்கல் விழா அனலைதீவு மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அனலைதீவு அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி கௌரி கேதீஸ்வரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக அனலைதீவு இந்து மாமன்றத்தைச் சேர்ந்த பொ.வெங்கடேஸ்வர சர்மா கலந்துகொள்வார். இராசையா சிறீதரனின் "கதிரவனும் பொங்கலும்" என்னும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (201)

# நாகர்கோவில் தெற்கு மீள்குடியேற்றம்: ஞாயிறன்று வீடுகள்மக்களிடம் கையளிப்பு

வடமராட்சி,ஜன.14

குடத்தனை வலிக்கண்டியில் நிர்மாணிக்கப்பட்ட நாகர்கோவில் தெற்கு மீள் குடியேற்றத்திட்டத்தின் திறப்பு விழாவும், புதிய வீடுகளைச் சம்பிரதாய பூர்வாகப் பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

நாகர்கோவில் தெற்கு மீள்குடியேற்றத் திட்ட, சமூக அபிவிருத்திச் சபைத் தலைவர் வே.சிதம்பரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக 'யூ.என்.ஹபிராட்' நிறுவன மாவட்ட முகாமையாளர் க.பரமேஸ்வரன், யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மா.சிறிஸ்கந்தகுமார், மக்கள் வங்கி வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் த.க.ஆனந்தராசா, இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளைத் தலைவர் வி.கே.கணேசலிங்கம், பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரயோகன், நாகர்கோவில் தெற்கு கிராம அலுவலர் தோமஸ் ஜூட், முன்னாள் கிராம அலுவலர் எஸ்.வித்தியாபதி ஆகியோர் கலந்துகொள்வர்.

நாகர் கோவில் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து நாகர் கோவில் தெற்கிலிருந்து வெளியேறிய 120 குடும்பங்களுக்கு தலா 2 பரப்புக் காணி வழங்கப்பட்டு, 'யூ.என்.ஹபிராட்' நிறுவனத்தின் உதவியுடன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அத்துடன் வேறு சில நிறுவனங்களின் உதவியுடன் இக்குடியேற்றத்திட்டத்தில் உள்ளக வீதிகள், பொது நோக்குமண்டபம், பாலர் பாடசாலை, சனசமூக நிலையம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. (202-236)

# விடுதலைப்புலிகளின் சடலங்களை ஒப்படைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஐ.சி.ஆர்.சி. தெரிவிப்பு

வவுனியா,ஜன.14

வன்னிக் கள முனையில் மீட்கப்பட்டு படையினரால் ஒப்படைக்கப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்களை அவர்களிடம் கையளிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் - ஐ.சி.ஆர்.சியின் - பேச்சாளர் சரசி விஜய ரத்ண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

களமுனையில் மீட்கப்பட்டு படையினரால் எம்மிடம் கையளிக்கப்பட்டுள்ள சடலங்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கமுடியாதுள்ளது. இந்தச் சடலங்களைப் பெறுப்பேற்க அவர்கள் வரவில்லை என்று கூறினார்.

வவுனியா வைத்தியசாலையில் விடுதலைப்புலி உறுப்பினர்களின் 36 சடலங்கள் உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் 13 சடலங்கள் நேற்றுமுன்தினம் மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்தது.

நீதிமன்றத்தின் உதவியைப் பெற்று அரசசெலவில் சடலங்களை தகனஞ் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த 24 சடலங்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் அரச செலவில் நேற்று அடக்கம் செய்யப்பட்டன. (அ-1)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வல்லிபுரம் இராசமணி**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம்: 27.03.1924
மறைவு : 13.01.1993
திதி: 14.01.2009

ஆண்டுகள் பல
சென்றாலும்
ஆறிடுமோ எம் நெஞ்சம்.

126/4, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி

கோப்பாய், ஜன.14

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் புத்தூர் கிழக்கு, ஆவரங்கால் கிழக்கு, இருபாலை கிழக்கு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி தெற்கு, நவக்கிரி ஆகிய பகுதிகளில்வெள்ளத்தால் பாதிப்புற்ற தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு 'டிஆர்சி' அமைப்பினால் உணவுப் பொருள்கள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டன.

இப்பிரதேசங்களைச் சேர்ந்த 974 குடும்பங்கள் இதனால் பயன்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-72)

### ஒத்துமாறல்

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் நகரத்துக்கு அண்மையில் உள்ள பாடசாலை ஒன்றில் உடற்கல்வி ஆசிரியையாகக் கடமையாற்றும் ஒருவர் யாழ்.மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புகளுக்கு: 0771117670

### கணித வகுப்புகள்

ஆண்டு - 8 தொடக்கம் ஆண்டு - 11 வரையான பிரத்தியேக வகுப்புகள் நடைபெறுகின்றன.

குறிப்பு: வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
இல.126, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6047 (81691)

### காணி விற்பனைக்கு

இராசாவின்தோட்ட றோட்டில்அசெம்பிளி ஒவ் கோட் தேவாலயத்திற்கு அண்மையில் 2½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: K.J.செகாமனசிங்கி
52/2, இராசாவின்தோட்டம் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P.2580752, 021 222 9128

A/L 2008 வர்த்தகப்பிரிவில் எம்மிடம் கல்வி கற்று உயர் பேறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

சாதித்தவர்களைக் கேளுங்கள் சாதனைக்கான வழியினை...?

J. சைந்தவி 3A மா.நி 05
Y. பபிதா 2AB மா.நி 11
K. தனுஜா 3A மா.நி 18
S. சாளினி A2B
S. சுகன்யா ABC
S. நிருஜன் 3B
S. சிவதையல்நாயகி 3B
S. பிந்துசா ABC

எம்மை நம்பியோர் கைவிடப்படார்.

இவர்களுடன் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஏனைய மாணவர்களையும் பாராட்டி அவர்களின் வாழ்க்கை சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் உங்கள் அன்பின்
திரு.பாலகஜன் கணக்கீடு. திரு.பாலசபேஷ் வணிகக்கல்வி.

A/L DAY CLASS - ஆரம்பம் 15.01.09 வியாழன் காலை 8.00
A/L 2011, 2010,2009 - ஆரம்பம் 17.01.09 சனி காலை 8.00
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்

பின்வரும் இடங்களில் ஆரம்பம்:
BEACON - யாழ்.நகர். BRAINPOWER- குருநகர்.
COLLEGE OF COMMERCE-சுன்னாகம்.
VISTRA- மானிப்பாய்.

## 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியையும் நன்றி நவிலலும்



### அமரர் முத்துதம்பி இராஜலிங்கம்

Retd.Inspector Of Works & Technical Officer
Building Dept.

மலர்வு 06*05*1927 உதிர்வு 16*12*2008

உடுப்பிட்டி, சந்தை வீதியைப் பிறப்பிடமாகவும் சிலாபத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முத்துதம்பி இராஜலிங்கம் அவர்கள் உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துதம்பி- தங்கச்சியம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம், இராஜசேகரம், இராஜநாயகம் ஆகியோரின் சகோதரனும் ராதாகிருஷ்ணன், சாந்தினி, மனோகரன், உமா, கலா, பிரேம்குமார் ஆகியோரின் சித்தப்பாவும் (இளையயா), தெல்லிப்பழை, பார்வீதியைச் சேர்ந்ததங்கராணியின் அன்புக் கணவரும், சாந்தகுமார், உதயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாசுகி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் சாருஜன், அபிராம், பிரியங்கா ஆகியோரின் பேரனுமாவார்(பப்பா).

அன்னாரின் இறந்த செய்தியை அறிந்து சகல முறையிலும் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவர்களுக்கும் எமது குடும்பம் சார்ந்த நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (14.01.2009 ) புதன்கிழமை அந்தியேட்டிக் கிரியையும் நாளை (15.01.2009) வியாழக்கிழமை வீட்டுக் கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்நடைபெறுவதால்அன்னாரின்ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்வண்ணம்அன்புடன்அழைக்கின்றோம்.

தொடர்பு:
தங்கராணி,
சிங்கபுர வீதி, சிலாபம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் இதய அஞ்சலி



### அமரர் சரவணை கந்தையா

(ஓய்வுபெற்ற காவலாளி, யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

கடந்த 15.12.2008 திங்கட்கிழமை இறைபதமடைந்த யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் முன்னாள் காவலாளி சரவணை கந்தையா அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

## இவ்வருடப் பொங்கல் திருநாளில் நீங்களும் ஒரு தங்க அறுவடையை நோக்கி முன்னேறுங்கள்



HOLMES POLLARD & STOTT

- தைபிறந்தால் வழி பிறக்கும் தங்கமே தங்கம்! என்பது என்றும் அனைவரின் வாழ்வுக்கும் பொருந்தும்.
- செலான் வங்கி அறிமுகப்படுத்தியிருக்கும் கோல்ட் ஹார்ட் கணக்கில் தங்கத்தை முதலீடு செய்வதன் மூலம் உங்களின் பொன்னான எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- அப்படியென்றால் உங்கள் அன்பிற்குரியவர்க்கு ஏன் செலான் வங்கியில் கோல்ட் ஹார்ட் கணக்கு ஒன்றை ஆரம்பிக்க இயலாது?
- உங்கள் தங்க கணக்கிலுள்ள மீதி, கிராம் கணக்கில் காட்டப்படும். ஆரம்ப வைப்பு சராசரி 5 கிராம்களாக இருக்கவேண்டும் மேலும் 0.1 கிராம் பெருக்கத்தின் வைப்பினூடாக உங்கள் தங்க முதலீட்டினை அதிகரிக்கலாம்.
- செலான் வங்கியில் கோல்ட் ஹார்ட் கணக்கு ஒன்றை ஆரம்பித்து உங்கள் அன்பிற்கு உரியவர்களைப் பூரிப்படையச் செய்யுங்கள்.
- இன்றைய உங்களின் சேமிப்பு நாளை உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம்.
- தேவைக்கு ஏற்ப பணமாகவோ அல்லது தங்கமாகவோ (24 கரட்) உடன் பெற்றுக்கொள்ளலாம்.

*பொங்கலோ பொங்கல் !*

செலிங்கோ செலான் கோல்ட் ஹார்ட்
பொன்னான எதிர்காலத்திற்கு

மேலதிக விபரங்களுக்கு அணுகுங்கள்:
அஸார் - 0773 856200 சதீஷ் - 071 4567789 தினேஷ் - 077 2092837
தலைமையகம்: செலிங்கோ செலான் டவர்ஸ், 90 காலி வீதி, கொழும்பு 3.
தொ.பே: 2456789, 074-701000 பெக்ஸ்: 2456456 ஈ-மெயில்: csgoldheart@seylan.lk
இணையதளம்: https://goldheart.seylan.lk

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04*05*1986

மறைவு 14*01*2005

### ஜெயக்குமாரன் தனுஷன்

ஆண்டுகள் நான்கு சென்றதுவே
அம்மா, அப்பாவின் துயரம் ஆறுதல்
அடையுதே இல்லை தனுஷா
உடன் கூடிப் பிறந்த அண்ணா, அக்கா
உடன் பிறவாச் சகோதரர்கள் நிலை
தடுமாறி கலங்குகின்றார்கள்
கஜன் கூட உனை மறக்கிறானில்லை
உன்னை நாம் வாழும் காலம் வரை என்றும் நினைத்திருப்போம்.
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

(81760)

"சு.ஜெயக்குமாரன்"
பழனி ஆண்டவர் கோவில்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
தொ.பே: 0777110427, 0771918959

உன் நினைவில் வாடும்:
அம்மா, அப்பா, அண்ணா, அக்கா,
மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, பெரியம்மா, பெரியப்பா,
மச்சான், மச்சாள், அம்மம்மா, உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த எதிர்காலம் அமைய இணைந்து செயற்படுவோம் யாழ். படைத்தளபதி பொங்கல் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம், ஜன.14

உங்கள் வாழ்வும், விவசாயத்துறையும் செழிப்புற்று சிறக்க எதிர்காலம் அமைய வேண்டும். அதன் பொருட்டு அனைவரும் திடசங்கற்பத்துடன் இணைந்து செயற்படுவோமாக.

இவ்வாறு யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மெண்டக்க சமரசிங்க விடுத்துள்ள தைப்பொங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:-

2009 ஆம் ஆண்டு உதிக்கும் போதே உலக வாழ் இந்து பக்கதர்கள் மிகவும் பக்தியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடும் தைப்பொங்கல் தினத்திலே யாழ். மக்களுக்கு தைப்பொங்கல் வாழ்த் துக்கூற கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை நான் அடைந்த பாக்கியமாகவும் கௌரவமான தாகவும் கருதுகிறேன்.

புதிய ஆண்டு பிறந்ததும் மக்கள் தமது விவசாயத்தின் சிறந்த பயனை அடைந்து அறுவடையைப் பெற்றதற்காகவும் பெறுவதற்காகவும் சூரியபகவானுக்கும் தமது விவ சாயத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் பொருட்டு பக்தியுடனும் மகிழ்வுடனும் பூசை வழிபாடுகளை மேற்கொண்டு புதிய ஆண்டில் தை மாதத்தை வரவேற் கின்றனர்.

விவசாயத்துறையிலே அபிவிருத்தியடைந்த நாடாகவே இலங்கை ஆதிகாலம் தொட்டு கருத்துப்பட்டு வந்தது. இலங்கை மக்களின் வாழ்வும் பொருளாதாரமும் விவசாயச் சூழலுடனும் பிண்ணிப் பிணைந்திருக்கிறது. தமது விவசாயத்துறையை மேம்படுத்த உதவும் இயற்கை வளங்களுக்கும் கால்நடைகளுக்கும் பூசை வழிபாடுகளை நடத்தி தமக்கு வழங்கிய சேவைக்கு நன்றிக்கடன் செலுத்தினர். வானிலிருந்து கொட்டும் மழைநீரும் சூரிய ஒளியில் இருந்து கிடைக்கும் சக்தியிலிருந்தும் தாம் பெற்ற தானிங்களை பொங்கல் இட்டுப் பொங்கும் போது பக்திப் பரவசத்துடன் தமக்கு தமது குடும்பத்தார், அயலவர் ஆகியோருக்கும் மகிழ்வையும் சௌபாக்கியம் நிறைந்த ஆண்டையும் வேண்டி நீங்கள் பொங்கலிட்டு மகிழ் கின்றீர்கள்.

நாம் எப்போதும் செய்நன்றிக்கு பிரதியுபகாரம் செய்ய வேண்டியது மேன்மையான குணமாகும். இது இலங்கை வாழ் மக்கள் அனைவரினதும் பொதுவான கருத்தாகும். ஆகவே பல்லினங்களான நாம் இந் நாட்டில் வாழ்ந்தாலும் எமது எண்ணங்களும், எதிர்பார்ப்புகளும் சமமானதென்பதை நீங்களும் உணர்ந்திருப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன். இலங்கை வாழ் மக்களுக்கு மட்டுமன்றி இவ்வுலகில் வாழும் அனைவருக்கும் சூரிய ஒளியானது சம தேவைப்பாடுடையதும் அத்தியாவ சியமானதுமாகும். இவ்வாறு இருக்கும் போது வடக்கிலும் தெற்கிலும் வாழும் நம் அனைவருக்கும் அதன் தேவையானது சமமானதே.

இவ்வாறான நன்நாளில் அனைத்து மக்களும் இன, மத் பேதங்களை மறந்து ஒன்றாக கைகோர்த்து இலங்கை அன்னைக்கு சமாதானத்தை ஏற்படுத்துமுகமாக பயங்கரவாதத்தை எதிர்த்து ஒன்றுபட்டு செயற்பட்டு தாய்நாட்டை பாதுகாத்துக் கொள்ள திடசங்கற்பம்கொள்வோம். உதித்த இந்த தைப்பொங்கல் தினத்திலே, தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற சொற்பதத்தின் அர்த்தத்தை உணர்த்தி நிற்கும் இவ் வேளையிலே, வடக்கையும் தெற்கையும் இணைத்து புதிய வழிதிறந்திக்கும் மகிழ்ச்சிகரமான இவ்வேளையிலே அடுத்துவரும் மகிழ்ச்சிகரமான நாளை நீங்களும் வன்னிப் பிரதேசத்தில் வாழும்எமது உறவுகளும் ஒன்றாக கைகோர்த்து கொண்டாவதற்கு நாம் அனைவரும் திடசங்கற்பம் கொண்டு இணைந்து செயற்படுவோம்.

மிகவும் மகிழ்ச்சியுடன் செய்நன்றிக்கு பிரதியுபகாரம் செய்துகொண்டு கொண்டாடும் இந்நாளிளே உங்கள் வாழ்வும் விவசாயத்துறையும் செழிப்புற்று சிறந்த எதிர்காலம் அமைய வேண்டுமென்று இந் நாளிலே மனம் ஒன்றி பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

(அ)

# வடமராட்சி கிழக்கிலிருந்து மேலும் 131 பேர் கொடிகாமத்தை வந்தடைந்தனர்

யாழ்ப்பாணம், ஜன.14

வடமராட்சி கிழக்கின் கட்டைக்காடு வெற்றிலைக் கேணிப் பகுதியில் இருந்து மேலும் 131 பேர் நேற்றுக் கொடிகாமம் வந்து சேர்ந்தனர்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய மகா வித்தியாலையத்தில் அவர்கள் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே இடம்பெயர்ந்து வந்தவர்களில் 194 பேரைத்தவிர ஏனையோர் சாவகச்சேரி நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டு கோப்பாய் இடைத்தங்கல் முகாமுக்கு நேற்று அனுப்பப்பட்டமை தெரிந்ததே.

கொடிகாமத்தில் தங்கியுள்ளவர்களுக்கு கொடிகாமம் லயன்ஸ் கழகத்தினர் உட்பட பொதுமக்கள் உணவு மற்றும் வசதிகளை வழங்கி வருகின்றனர்.

(அ-1-207)

# வன்முறை இருளைத் துடைத்தெறியும் நம்பிக்கையின் ஆரம்பமாக அமையட்டும்

## அமைச்சர் டக்ளஸ் பொங்கல் செய்தி

கொழும்பு, ஜன. 14

வன்முறை என்னும் இருளைச் சூரிய ஒளி துடைத்தெரியும் என்ற நம்பிக்கையின் ஆரம்பமாகத் தைத்திருநாள் அமையட்டும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சரும் வடமாகாணத்துக்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தமது பொங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எங்கள் மக்களின் வாழ்வில் வசந்தம் வீசும் பொன் நாள் மலர தை மகள் வழி திறக்க மகிழ்ச்சிப் பொங்கலாகப் பொங்கி வழியட்டும்.

உழைத்து உண்ணுவதே கௌரவம் எனும் உயரிய பண்பை உலகுக்கு உணர்த்தும் உழவர் திருநாளில் ஒவ்வொருவர் இல்லங்களிலும் சந்தோஷம் பரவட்டும்.

தடைகள் நீங்கி துயரம் விலகும் இனியதொரு வாழ்க்கையை எமது மக்களுக்கு அமைத்துக் கொடுக்கும் எங்கள் இலட்சியக் கனவுகள் நனவாகி வருகிறது. வன்முறை எனும் இருளை சூரிய ஒளி துடைத் தெறியும் என்ற நம்பிக்கையின் ஆரம்பமாகத் தைத்திருநாள் அமையட்டும்.

நடைமுறைச் சாத்தியமென்று நாம் தோளில் சுமந்த இலட்சியங்கள் இன்று நடந்தேறப் போகின்றன என்ற ஆனந்தம் பொங்கும் இந்நாளில் பொங்கல் மகிழ்ச்சி நிலைக்கட்டும்.

- இவ்வாறு அவர் வாழ்த்தியுள்ளார்.

(அ-1)

# எதிர்பார்த்த பங்களிப்பைஇந்தியா வழங்காமை குறித்து வேதனை அடைகிறோம்

## இந்துமாமன்றம் பொங்கல் செய்தியில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.14

இந்த நாட்டில் இந்து மக்களுக்கு விமோசனம் பெற்றுக்கொடுப்பதில் இந்தியா இன்னும் எதிர்பார்த்த பங்களிப்பை வழங்காததையிட்டு இந்து மக்கள் பெரும் வேதனையடைகிறார்கள் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் விடுத்த பொங்கல் செய்தியில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

எமது மக்களின் தனித்துவமிக்க பண்டிகைகளுள் ஒன்றாக தைப்பொங்கல் பெருமை பெறுகிறது. தைமாதப் பிறப்பு நாளில் சூரியபகவானுக்கு பொங்கிப் படைத்து வழிபாடு செய்வதன் ஊடாக இந்து மக்கள் தைப் பொங்கலை பக்தி பூர்வமாக மட்டுமின்றி, தமிழர் திருநாள் என்ற வகையில் குதூகலமாகவும் கொண்டாடி மகிழ்வது வழக்கம். ஆனால் இன்றைய சூழ்நிலையில் உதயமாகும் தைத்திங்கள் தமிழ் மக்களுக்கு எவ்வகையிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியாத நிலையில் அமைந்திருக்கிறது.

இந்த நாட்டில் வாழும் இந்து மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் சொல்லொண்ணா வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும் எதிர் நீச்சல் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பெரும்பாலானவர்கள் சொந்த வீடுகளில் இருந்து வெளியேறி சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழ்கிறார்கள்.

அவர்களது பிரச்சினைகளை அரசாங்கமும், ஏனையோரும் மனிதாபிமான முறையில் அணுகவேண்டும் என்பதையும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு யுத்தமோ, வன்முறையோ ஒரு வழியாக அமையாது என்பதையும் சகல சமயத்தினரும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். மேலும் தாமதியாது அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட முன்வருமாறு சகலருக்கும் அறைகூவல் விடுக்கிறோம். தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்துவதும் அரசியல் தீர்வு கிடைக்கும் வரை இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் எதிர்பார்க்க முடியாது.

இந்த நாட்டில் இந்து மக்களுக்கு விமோசனம்பெற்றுக்கொடுப்பதில் இந்தியா இன்னும் எதிர்பார்த்த பங்களிப்பை வழங்காததையிட்டு இந்து மக்கள் பெரும் வேதனையடைகிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். இந்து மக்களை பெரும் பான்மையாகக் கொண்ட தமிழ் பேசும் மக்கள் தங்கள் சொந்த மண்ணில் சுதந்திரத்துடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதற்கு மலரும் தை மாதத்தில் இருந்து வழிபிறக்க வேண்டும். அதற்காகப் பிரார்த்திக்கிறோம்.

தமிழ் மக்கள் கடந்த காலங்களில் அனுபவித்து வந்த எல்லா விதமான இன்னல்களும் முற்றாக நீங்கி, அவர்களது வாழ்வில் மகிழ்ச்சியும் விமோசனமும், நிம்மதியும் கிடைப்பதற்கு மலரும் தைத்திரு நாள் வழிவகுக்க வேண்டும்-என்று உள்ளது.

(அ-ரி)

# இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி சென்னையில் திங்களன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜன. 14

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும், இனப்படுகொலை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக பாரதீய ஜனதா கட்சி சார்பில் சென்னையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை மெமோரியல் ஹோல் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவர் இல.கணேசன் தலைமை தாங்கினார். தேசிய செயலாளர் திருநாவுக்கரசர் எம்.பி., தமிழக பொது செயலாளர் தமிழிசை சவுந்தரராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழர் தேசிய அமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன், இலங்கை எம்.பி. சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதில் திருநாவுக்கரசர் எம்.பி. பேசியவை வருமாறு-

இலங்கையில் தமிழர்கள் தினமும் கொல்லப்பட்டு வருகிறார்கள். அவர்கள் படும் துன்பம் சொல்லிடங்காதவை. இது பற்றி மத்திய அரசிடம் எவ்வளவு சொல்லியும் நடவடிக்கையில்லை. பிரதமர் வாக்கு கொடுத்த பிறகும் பிரணாப் முகர்ஜி இலங்கை செல்லவில்லை. அவர் செல்வாரா என்பதும் தெரியவில்லை.

கிளிநொச்சியில் இருந்து ஒன்றரை லட்சம் தமிழர்கள் வெளியேறி உள்ளனர். அவர்களின் நிலை பரிதாபமாக இருக்கிறது. இந்திய அரசு இலங்கை அரசுக்கு துணை போகிறது. இந்த நிலை மாறவேண்டும். மத்திய அரசு தலையிட்டு இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வழி காண வேண்டும்- என்றார்.

தமிழக பாரதீய ஜனதா கட்சித் தலைவர் இல.கணேசன் பேசும்போது -

''மத்திய அரசு இலங்கைப் பிரச்சினையில் தமிழர்கள் படும்பாட்டை கண்டும் காணாமல் இருக்கிறது. அங்கே வாழும் இந்துக்கள் கொல்லப்பட்டு கொண்டிருக்கிறார் கள். இது இலங்கை பிரச்சினை அல்ல, இந் தியாவின் பிரச்சினை. இதை நாடெங்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி இலங்கைப் பிரச்சினையில் தீர்வுகாண வேண்டும் - என்றார்.

# நீதிமன்றத் தீர்ப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது அரசுத் தரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சஞ்சீவ ராஜரட்ண, மேற்படி விடயம் தொடர்பான உயர்நீதிமன்ற உத்தரவை அரசு பின்பற்றவில்லை, பெற்றோலை லீற்றர் நூறு ரூபாவாக விற்பனை செய்யவில்லை என்று தெரிவித்தார்.

**நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு**

இவ்விடயத்தில் மக்களுக்கு உரிய நிவாரணம் அளிக்கும் மாற்றுத் திட்டம் குறித்து அரசும், அமைச்சரவையும் பரிசீலிப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த விடயத்தில் மனுதாரர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பதாக உயர்நீதிமன்றம் கருதியதாலேயே இதில் தலையிட்டு, 'ஹெட்ஜிங்' உடன்படிக்கையை இடைநிறுத்தி, உரிய நிவாரணத்தை வழங்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது என்று பிரதம நீதியரசர் கூறினார்.

இவ்விடயத்தில் நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு நாட்டின் நிறைவேற்று அதி காரத்துக்குரியது. அதனை நிறைவு செய்யாமல் நிறைவேற்று அதிகாரம் நடந்து கொள்ளுமானால் நாடு சட்டமில்லாத தேசமாகும் என்றும் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டினார்.

**உயர்நீதிமன்றத்திடமே முறையிட்டு சீர்செய்து கொள்ள முயல வேண்டும்**

இலங்கை அரசமைப்பின் 118 ஆவது பிரிவின்படி நாட்டில் அதி உச்ச நியாயாதிக்கம் கொண்ட மேன்முறையீட்டு ஆயம் உயர் நீதிமன்றமே. இத்தகைய ஆயத்தினால் வழங்கப்படும் உத்தரவுகளை நிறைவேற்றிக் கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்பு நிறைவேற்று அதிகாரத்துக்கு உண்டு. அப்படியான உத்தரவுகளை நிறைவேற்ற முடியாது என நிறைவேற்று அதிகாரம் தான் தோன்றித்தனமாகவும் கண்மூடித்தனமாகவும் நடக்க முடியாது; நடக்கவும் கூடாது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஆட்சேபம் இருக்குமானால் உயர்நீதிமன்றத்திடமே அதை முறையிட்டு சீர் செய்து கொள்ள முயல வேண்டும். அதுதான் ஒரே வழி. அதையும் செய்யாமல், ஒருதலைப்பட்சமாக - காட்டுமிராண்டித் தனமாக - உயர்நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்த முடியாது எனப் புறக்கணித்து நடக்க நிறைவேற்று அதிகாரம் துணியுமானால் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு இல்லாத நிலையே ஏற்படும் - என்றும் விசனத்துடன் கூறினார் பிரதம நீதியரசர்.

இச்சமயத்தில் மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் குறுக்கிட்டனர்.

இந்த மனுவைத் தொடர்ந்து தாங்கள் வலியுறுத்தினால், உயர்நீதிமன்ற உத்தரவு நாட்டின் நிறைவேற்று அதிகாரத்தினால் தொடர்ந்து உதாசீனப்படுத்தப்பட்டு, உயர்நீதிமன்றம் அவமதிக்கப்படுவது உறுதிப்படுத்தப்படும் நிலைமை ஏற்படும் என அவர்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே உயர்நீதிமன்றத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகத் தாங்கள் தங்களது மனுக்களை முடிவுறுத்தி வாபஸ் பெற [illegible] என அவர்கள் நீதிமன்றுக்குத் தெரிவித்தனர்.

மனுதாரர்களின் இந்நிலைப்பாட்டைக் கவனத்தில் எடுத்து, அரசுத் தரப்பின் பதிலை நீதிமன்றுக்குத் தெரியப்படுத்துவதற்கு ஜனவரி 27 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கி, வழக்கை ஒத்திவைத்தனர் நீதியரசர்கள்.

அத்தினத்தில் மனுக்களை மனுதாரர்கள் முடிவுறுத்த அனுமதிக்கப்படுமானால் இந்த மனுக்களை ஒட்டி உயர்நீதிமன்றம் இதுவரை விடுத்த உத்தரவுகள் எல்லாம் செயலிழக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தகைய நிலையில் -

'ஹெட்ஜிங்' உடன்படிக்கையை ஒட்டி வங்கிகளுக்கு அரசினால் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகளை இடைநிறுத்தியும் -

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் மற்றும் சில உயரதிகாரிகளை உடனடியாக சேவையில் இருந்து இடைநிறுத்தியும் -

உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவுகளும் செயலிழக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போரை நிறுத்த உதவுமாறு ஒபாமா, ஹிலாரிக்கு தமிழர் அமைப்பு மகஜர்

## உலகளாவிய ரீதியில் கையெழுத்துச் சேகரிப்பு

கொழும்பு, ஜன. 14

அமெரிக்காவில் இயங்கும் 'ஒபாமாவுக்கான தமிழர்கள்' (Tamils for Obama) என்ற அமைப்பு, அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள பராக் ஒபாமாவுக்கும் அமெரிக்க வெளியுறவுச் செயலராக நியமனம் பெறுகின்ற திருமதி ஹிலாரி கிளிண்டனுக்கும் மனு ஒன்றை அனுப்பவுள்ளது. அதன் பொருட்டு கையெ ழுத்து வேட்டையில் அது தற்போது இறங்கியுள்ளது.

தமிழர்களின் சார்பில் அனுப்பப்படவுள்ள மனுவில் ஒரு வாரத்திற்குள்ளாகவே 50 ஆயிரம் பேர் வரை கையெழுத்திட்டிருக்கின்றனர் என அமைப்பின் ஊடகத் தொடர்பாளர் தமது செய்தியாளரிடம் தெரிவித்தார் என புதினம் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

தமிழர் தேசிய இனப் போராட்டத்தையும், ஈழத் தமிழர்கள் இன்று எதிர்நோக்கியிருக்கும் இனப்படுகொலை அபாயத்தையும் எடுத்து விளக்குவதுடன், இலங்கைப் பிரச்சினையில் தாமதமின்றி தலையிட்டு, தமிழினப் படுகொலையை நிறுத்தி தமிழர்களுக்கு நீதி கிடைக்க உடனடியாக வழிசெய்யுமாறு அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியையும், வெளியுறவுச் செயலரையும் கேட்டுக்கொள்ளும் வகையில் இந்த மகஜர் அமைந்துள்ளது.

இலங்கையில் நடைபெறும் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருமாறு இந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது. இனப்படுகொலைப் போரை நிறுத்துவதற்கு ஒபாமா அரசு உடனடியாகக் காத்திரமான நடவடிக்கையை எடுக்குமென்றும் தமிழர்களுக்கு நல்வழிகாட்டும் என்றும் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(அறிக்கையின் முழு விவரம் நாளைய உதயனில்)

# முல்லைத் தீவுப் பகுதியில் நேற்று அடிக்கடி விமான, ஷெல் தாக்குதல்கள்

கொழும்பு, ஜன.14

முல்லைத் தீவுப் பகுதியில் அரச படைகள் நேற்றுப் பத்துத் தடவைகள் விமான மற்றும் ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இதில் இருவர் காயமடைந்துள்ளனர். 12 வீடுகள் சேதமாகின என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அரச வான் படையின் விமானங்கள் 18 குண்டுகளை வீசியுள்ளன.

இதில் அனுராச், சிவராசா, தமிழ்ச் செல்வன், கிரிதா, றமா, யோகராசா, பூபதி, கோபாலன், சந்திரன், டொனாட் ஆகியோரின் வீடுகளும் அலேக்ஸ் முன்பள்ளி, செல்வபுரம் யூதாதேயு கோவில், அருட் சகோதரிகள் இல்லம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம், புனித இராயப்பர் ஆலயம், முல்லை நகர் வணிக நிலையங்கள் ஆகியன சேதமடைந்துள்ளன.

இதேவேளை, கிளிநொச்சி விசுவமடு பகுதியை இலக்குவைத்து நேற்று மாலை 6 மணியளவில் படையினர் ஷெல் தாக்குதல் நடத்தினர். இதில் பொதுமக்கள் இருவர் காயமடைந்துள்ளனர். பெருமளவில் இடம்பெயர்ந்த மக்கள் இப்பகுதியில் குடியமர்ந்துள்ள நிலையில் இத்தாக்குதல் படையினரால் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, விடுதலைப் புலிகளின் முக்கிய பகுதிகளை இலக்குவைத்தே இத் தாக்குதல் வெற்றிகரமாக நடத்தப்பட்டது என அரசு தரப்பு அறிவித்துள்ளது.

## சுவரொட்டி ஒட்டிய இருவர் கைது

ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்கு முறையைக் கண்டித்து மக்கள் விடுதலை முன்னணியினரால் வெளியிடப்பட்ட சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த இருவரை தெமட்டகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என தெமட்டகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இந்த இருவரும் தமது கட்சியின் செயற்பாட்டாளர்களென ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹெந்தி தெரிவித்துள்ளார்.

## அம்பாறையில் கிளைமோர் மீட்பு

கொழும்பு, ஜன 14

அம்பாறை காஞ்சிரங்குடாப் பகுதியில் நேற் றுப் பிற்பகல் 20 கிலோகிராம் நிறையுடைய அதிசக்திவாய்ந்த கிளைமோர்க் குண்டு ஒன்றை விசேட அதிரடிப்படையினர் மீட்டிருக்கின்றனர் என தேசியப் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்திருக்கிறது.

படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கை ஒன்றின்போதே இந்தக் குண்டு மீட்கப்பட்டது என்றும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

சம்வத்தின் பின்னர் அங்கு அதிரடிப்படையினர் மேலதிக தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## மேலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை புதுக்குடியிருப்பு வைத்திய சாலை சுற்று வட்டப் பகுதியில் இடம் பெற்ற பீரங்கித் தாக்குதலில் விஜயரட்ணம் வத்சலா (வயது-38) என்பவர் உயிரிழந்துள்ளார். கோணாவிலைச் சேர்ந்த முருகையா மாரிமுத்து (வயது- 61), கோம்பாவில் பகுதியைச் சேர்ந்த ஆனந்தகுமார் மனோன்மணி (வயது-26) ஆகியோர் அங்கு காயமடைந்த ஆறு பேரில் இனங் காணப்பட்டுள்ளனர்.

விசுவமடுப் பகுதியில் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர்.

அதேவேளை விசுவமடு, அதிசய விநாயகர் கோவில் பகுதி மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் 14 பேர் படுகாயமடைந்தனர் என்று அந்த இணையத் தளங்கள் வெளியிட்டிருந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட் டிருந்தது. (அ-சி)

## வெள்ளியன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரோஹித போகொல்லாகமவையும் சந்திப்பார் எனத் தெரிவித்த அரச வட்டாரங்கள் இது வழமையான விஜயம் எனவும் வர்ணித்துள்ளன. (அ-சி)

## வன்னி வைத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த கோரிக்கையின் முழு விவரம் வருமாறு:

''தற்போது வன்னிப்பிரதேசத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மோதல்கள் காரணமாக மக்கள் மனித நேயம் தாண்டிய அவல வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டு நாளாந்தம் இறந்தும் காயப்பட்டும் கொண்டிருக்கின்றனர். தமது சொந்த இடங்களை விட்டு நகர்ந்து உணவுக்காகவும் இருப்பிடத்திற்காகவும் ஏங்கித்தவிக்கும் நிலையில் தமது உயிர் எந்த நேரத்தில் பறிக்கப்படும் என்ற பயப்பீதிக்குள் தள்ளப்பட்டுள்ளதுடன் அன்றாடம் உயிர்பறிக்கப்பட்டும், காயப்படுத்தப்பட்டும் கொண்டிருக்கும் நிலை தொடர்கிறது.

இந்நிலையில் மக்களின் உயிர்காக்கும் பணியில் ஈடுபடும் வைத்தியசாலைகள் தமது சொந்த இடங்களிலிருந்து நகர்ந்து பாடசாலைகளிலும் பொதுக்கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. தற்போது கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்திய சாலை விசுவமடு மகாவித்தியாலயத்தில் இயங்கி வருகின்றது. இதுவே இம்மாவட்டத்தின் மருத்துவப்பணியை ஆற்றிவருகின்றது.

தற்போதைய நெருக்கடி காரணமாக ஷெல் மற்றும் விமானக்குண்டு வீச்சில் கடந்த முதலாம் திகதியிலிருந்து நேற்று நண்பகல் வரை 28பேர் இறந்தும் 185 பேர் காயப்பட்டும் ஏனைய வகையில் நோய் வாய்ப்பட்டும் உள்ளனர். மக்களுக்கு வைத்தியம் செய்யும் கிளிநொச்சி வைத்திய சாலை சூழலை (விசுவமடு ம.வி) போரற்ற வலயமாக பிரகடனம் செய்வதுடன் இவ் வைத்தியசாலை மீதும் சூழல் மீதும் தாக்குதல் நிகழ்த்துவதை நிறுத்தி எமது மக்கள் இயல்பான மருத்துவ வசதிகளைப் பெற ஆவன புரியும் வண்ணம் தயவாக வேண்டுகின்றோம்.

இலங்கை அரசின் ஜனாதிபதி என்ற வகையிலும் முப்படைகளின் தளபதி என்ற வகையிலும் இச் செயற்பாட்டை தாங்கள் உடனடியாகச் செய்ய வேண்டும் என்பதை இங்கு வாழும் மக்கள் சார்பாக வினயமுடன் வேண்டுகின்றோம்- என்றுள்ளது. (அ-சி)

## திருமாவளவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனவெறிப் போரை நிறுத்தி அமைதிப் பேச்சுவார்த்தையை நடத்து'' என்ற கோரிக்கையை முன்வைத்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அவர் நேற்று அறிவித்துள்ளார்.

இலங்கையில் போர்நிறுத்தத்தைக் கொண்டுவர தமிழக, மத்திய அரசுகள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதனை வலியுறுத்தி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக திருமாவளவன் திடீரென அறிவித்திருப்பது தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (அ-1)

## பயங்கரவாதத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைப்பொங்கல் பண்டிகையானது இந்துக்கள் தமது பாரம்பரிய கலாசார மரபுரிமைகளை அனுஷ்டித்து, அவற்றுக்குத் தம்மை அர்ப்பணித்து, அவற்றைப் புதுப்பித்து எமது நாட்டின் ஏனைய மக்களைப்போல எதிர்காலம் குறித்த சாதகமான எதிர்பார்ப்புகளை வைக்கின்றனர். இது எமது சமூகத்தின் பன்மைத்துவத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இத்தைப்பொங்கல் தினத்தில் எனது எண்ணங்கள் எல்லாம் தங்களை விடுவிப்பதற்காகப் போராடுகின்றோம் என உரிமை கோருபவர்களாலேயே தொடர்ச்சியாக சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் பற்றியதாகும். இவ்விசேட தினத்தில், இலங்கை வாழ் இந்துக்களினதும் எனதும் சகோதர, சகோதரிகளான தமிழ் மக்கள் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து உண்மையாக விடுவிக்கப்பட்டு, இலங்கையின் வடக்கே சுதந்திரமும் ஜனநாயகமும் மீளக் கட்டியெழுப்பப்படும் நாள் மிகத் தூரத்தில் இல்லை என்பதை இலங்கைவாழ் இந்துக்களுக்கு உறுதிபடத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் என்று உள்ளது.(அ-சி)

## வரலாற்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதையை நோக்கியே பயணித்துக் கொண்டிருக்கின்றது.

வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல் களத்தில் அரசுக்கு அறவே போட்டி கிடையாது. இதை நினைத்து நாம் கவலைப்படுகிறோம்.

என்ன செய்வது ? ஐ.தே.கட்சிக்கான மக்கள் ஆதரவு குறைந்துள்ளதால் அரசுக்கான ஆதரவு கூடி தேர்தலில் போட்டி இல்லாமல் போயுள்ளது.

நாம் மிகவும் இலகுவாக வெற்றிபெறப் போகிறோம். ஐ.தே.கட்சியை இந்தத் தேர்தலிலும் யாராலும் காப்பாற்ற முடியாது.

தேர்தல்களில் மாத்திரமன்றி யுத்தத்திலும் நாம் பாரிய வெற்றிகளைக் குவித்து வருகிறோம்.

அண்மையில் கிளிநொச்சியைப் பிடித்த நாம் வடக்கில் எஞ்சியுள்ள அனைத்துப் பகுதிகளையும் கைப்பற்றி புலிகளை முற்றாக ஒழித்துக் கட்டுவோம்.

தினமும் யுத்த வெற்றிகளைக் குவித்து வரும் நாம் சுதந்திரதினமான பெப்ரவரி 4 ஆம் திகதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் யுத்த வெற்றி ஒன்றை இந்த நாட்டுக்குப் பெற்றுக் கொடுப்போம்.

அந்த வெற்றி என்னவென்று அறிய இந்நாட்டு மக்கள் ஆவலுடன் காத்திருக்க வேண்டும் - என்றார். (அ-சி)

ஐடியல் அக்கடமி
சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் | இடைப்பிட்டி காரைநகர் | நீராவியடி யாழ்நகர் | அந்தோனியார் கோயில் அருகாமை மானிப்பாய்
அனைவருக்கும் எமது உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்
இன்று காலை 10.30 மணியளவில் எமது நான்கு நிறுவனங்களிலும் பொங்கல் விழா நடைபெறுவதால் ஐடியல் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.
கணித ஆசானும் நிர்வாகியும்
V.N.பத்மநாதன்

கற்சுமி வெளியீடு
கற்சுமி வெளியீடுகளை புதிதாகப் பெற விரும்பும் பாடசாலைகள் தொடர்பு கொள்க
பெற்றோர்/மாணவர்கள் பதிவு செய்யுங்கள்.
நாவலர் வீதி, யாழ்.

SUBRA (14)
வட்டுக்கோட்டை 9.30
பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான
Spoken English & Grammar
New Batch
By: Britto
★பல்கலைக்கழக வினாத்தாள்களும் கற்பிக்கப்படும்.
இரு இடங்களிலும்
15.01.2009
சித்தங்கேணி 8.30

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS
கலைப்பிரிவு
தமிழ்: திரு.குழந்தை
திங்., செவ்., வியாழன் 9 மணி
ஆரம்பமாகி விட்டது.
சகல பாடங்களும் 8 மணியிலிருந்து நடைபெறும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெ[illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர் - 2009

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



இன்று தைப்பொங்கல் திருநாள். தமிழர்களின் பெருநாளாகிய இத் தைப்பொங்கல் திருநாள், நன்றிக்கடன் செலுத்துகின்ற ஒரு நன்னாளாகும். அதாவது நெல்விளைச்சலுக்கு மூலகாரணனாய் நின்று நெல்முளைப் பதற்குதவிய சூரியபகவானுக்கு, பொங்கிப் படைத்துப் பூஜித்து வணங் கும் பொன்னான திருநாள் இது.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது முது மொழி. ஆகவே இன்றைய தைத்திருநாள் முதலாக இற்றை நாள்வரை பட்ட துன்ப துயரங்கள் யாவும் நீங்கப்பெற்று, இனியாவது மகிழ்ச்சியும் ஆனந்தமும் வாழ்வில் பொங்க வேண்டும் என்ற மனவிருப்புடன் இனிப்பான பொங்கலை இறைவனுக்குப் படைத்து மக்கள் எல்லோருமே இன்புற்றிருக்க வேண்டுமென்று நல்லைக் குருமணியை வணங்கி எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தப்பெருமான் திருவருள் வேண்டிப் பிரார்த்தித்து அருளாசிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்று முதலாக, மக்கள் எல்லோரதும் இயல்பு வாழ்க்கையில் இன்பம் பெருகி மகிழ்ச்சி கலந்த மங்களம் பொங்கவேண்டு மென்று ஆண்டவன் அருள்வேண்டி வணங்குகின்றோம்; வாழ்த்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
*இரண்டாவது குருமஹா சந்நிதானம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,*
*யாழ்ப்பாணம்.*

## சகோதரத்துவம் நிலவட்டும்

தக்ஷிணாயண புண்ணிய கால நேரம் மழை மேகக் கூட்டங்களின் மத்தியிலும் சூரிய பகவான் தமது ஒளியினைப் பரப்பி வயல்களில் நிறைந்த நெற்கதிர்களை சிறப்புற வளர்த்து நல்ல அறுவடையைத் தந்த சூரிய பகவானுக்குப் பொங்கல் பொங்கி படைத்து நன்றி செலுத்தும் ஒரு விழாவாகப் பொங்கல் விழா அமைகின்றது.

உத்தராயண புண்ணிய காலத்துடன் மக்கள் மனதிலுள்ள அச்சம், நிம்மதியின்மை எல்லாம் நீங்கி நாட்டில் நிரந்தர சாந்தி, சமாதானம், சகோதரத்தும் அனைத்தும் நிலவ இப் பொங்கல் நன்னாளில் நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக. 'பொங்கலோ பொங்கல்' என அனைவரும் பொங்கி மகிழ்வோமாக. அனைத்து மக்களுக் கும் இப் பொங்கல் நன்னாளில் ஆசிகூறி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

'லோகா சமஸ்தா சுகினோ பவந்து' இன்பமே சூழ்க

ப.மனோகரக்குருக்கள், தலைவர்,
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

## நாயகி இனிக்க வாடீ....!

மார்கழித் திருநாள் தொட்டு
மங்கை நீ வருநாள் மட்டும்...
வாசலில் கோலமிட்டு
வனிதையர் அழகு பார்த்து
தேவி தைமகளே.... உந்தன்
திருவடி பதிக்கும் நாளில்..
வேல்விழி கலங்கி நின்று
விடியுமோ காலம் என்று....
பாகமாய்ப் பொங்கலிட்டு
பலவகைத் தேனாம் பண்டம்...
ஆசையாய்ப் படையலிட்டு
அம்மையே தையாளுன்னை - நாம்
காதலால் கூடி நின்று
காண நாம் வேளை கொண்டோம்...
தாயவள் நீயோ... அந்த
தரணியாள் உழவோன் பொங்க
ஞாயிறான் ஒளியைக் கூட்ட
நாயகி இனிக்க வாடி...

-தவக தியாகன்.

## இடரின்றி இனிதே வாழ வழி பிறக்கட்டும்

இனிய அன்பர்களே! இயற்கையைப் போற்றும் இனிய திருநாள் தைப்பொங்கல். தமிழர் தம் வாழ்வில் தலையாய திருநாள். சேற்றில் கைவைத்து உழவன் பாடுபடுவதனாலேயே நாம் சோற்றில் கைவைக்க முடிகின்றது. உழுது பயிர்செய்யும் உழைப்பாளிகளை நன்றியோடு வாழ்த்தும் நன்னாள். இத்திருநாளில் ஒளிதரும் சூரியனையும் உணவு தரும் உழவனையும் வாழ்த்துவோம், வணங்குவோம். அல்லற்பட்டு அழுத கண்ணோடு அகதிகளாகத் துன்புறும் மக்களுக்காகப் பிரார்த்திப்போம்.

வயிற்றுப் பசியால் எங்கெல்லாம் மக்கள் வருந்துகிறார்களோ அவர்கள் துயரின்றி, உண்ண உணவு கொடுத்து உலகத்தைக் காத்திட இறைவனை இன்னாளில் மன்றாடுவோம். எங்கும் அன்பும் சமாதானமும் நிலைத்திடப் பிரார்த்திப்போம்.

எம்மைப்பெற்று ஆளாக்கிய தாய், தந்தையரை , அறிவு தந்த ஆசிரியரை, உதவிகள் செய்த உத்தமரை நன்றியோடு இந்நாளில் நீள நினைந்து வாழ்த்துவோம். வீடுகள்தோறும் புனிதம் காத்து, பொங்கி வழிபாடுசெய்து, உறவுகளுக்கு பகிர்ந்து அன்பை, நட்பைக் காப்போம் . ஆதரவற்றவரை நாடி அவர் உள்ளம் மகிழ இந்நாளில் உதவுவோம். தைத்திருநாள் தமிழர் வாழ்வில் நம்பிக்கை ஊட்டும் திருநாளாகக் கருதுவோம். எங்கும் மங்களமும் மகிழ்ச்சியும் உண்டாகத் தைத்திருநாளைப் பிரார்த்தனையுடன் வரவேற்போம். இனிய திருநாளில் இடரின்றி அனைவரும் என்றும் இன்புற்று வாழ வாழ்த்தி அமைகின்றேன்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி*
*தேவஸ்தானம், தெல்லிப்பழை.*





⇨ நாளாந்த பரிசுத் திட்டம்
⇨ வாராந்த பரிசுத் திட்டம்
⇨ ஊருக்கு ஊர் பிராந்திய பரிசுத் திட்டம்
⇨ ஆண்டிறுதி மாபெரும் பரிசுத் திட்டம்
⇨ ஆண்டிறுதி பிரீமியம் பரிசுத் திட்டம்

வாராந்த பரிசுத் திட்டத்தின் ரூபா 1000 000 இற்கான அதிபதியாகி லட்சாதிபதி ஆகிடுவீர்

மேலதிக விவரங்களுக்கு அண்மையில் உள்ள ஒரு கிளையை நாடுங்கள்

Hatton National Bank
A quoted public company incorporated in Sri Lanka in March 1970, with limited liability
ஹற்றன் நஷனல் வங்கி
யாழ்ப்பாணம்-சுன்னாகம்-நெல்லியடி
ஸ்ரான்லி வீதி, மானிப்பாய்.
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி


## வழியொன்று வகுத்து வாழ்விப்பாய்

பண்டைய தமிழர் எங்கள்
பழம் பெரும் வாழ்வில் எல்லாம்
உண்டியை எமக்குத் தந்த
உழவர் தம் செயலை மெச்சி
கன்றுடன் பசுவும் நல்ல
காளையையும் கூட்டி வந்து
கதிரொளி வீசி நின்ற
கதிரவன் தன்னைப் போற்றி
மாவிருள் திரட்டி வந்து
மழைதனைப் பொழிய வைத்து
வான், கடல், காற்றைப் போற்றி
நன்றி நவின்றிடும் நன்னாளின்னாள்.

இன்று....
அன்பெனும் பானை ஏற்றி
அறிவெனும் விளக்கைத் தூண்டி
பண்பெனும் நீர் நிறைத்து
பக்தியாம் அரிசி இட்டு
பகுத்தறிவாம் தீயை மூட்டி
செந்தமிழ் கலையாம் மாவால்
சிறப்புறு கோலம் தீட்டி
வந்த இப்புதிய ஆண்டில்
வல்வினை அனைத்தும் மாள
பொங்கிய பொங்கல் தன்னை
பூவையர் ஒன்றுகூடி
ஈசனார் முன் படைத்துவிட்டு
இறைவனை ஒன்று கேட்போம்
துயரெலாம் களைந்துபோக
தூய நல் அமைதி பூக்க
இணையிலாது எமது மக்கள்
இன்பப் பூங்காவில் திளைத்து நிற்க
வழியொன்று வகுத்து எம்மை
வாழ்விப்பாய் ஈசா! போற்றி

-விகடகவி

## பொங்குமா நீதி! தங்குமா அமைதி!!

தை ஒன்று பிறந்துவிட்டது
தை பொங்கல் இன்று மலர்ந்துவிட்டது
இனிய பொங்கல் உண்போமா
இங்கு அமைதி என்போமா

புதிய புதிர் கொண்டு பொங்கட்டும் தைப்பொங்கல்
புதுமைக் கொள்கைகளும் பொங்கட்டும் மனதில்
உலகை பெருக்கிடுவோம் உழவர் மேன்மையால்
பகைமை கருக்கிடுவோம் உறவின் தன்மையால்

சுயமான விடுதலை எம்மில் புலர்ந்திடட்டும்
சூரிய ஒளியென உரிமை பிரகாசிக்கட்டும்
சிறைவாழ்வின் விலங்குகள் உடைந்திடட்டும்
நிறைவாழ்வின் இலக்குகள் அடைந்திடட்டும்

நீண்டெழும் வன்மம் தணிந்திடட்டும்
உண்டு மகிழ உறவுகள் இணைந்திடட்டும்
ஆண்டாய் எங்கும் அமைதி தங்கிடட்டும்
உண்மை அன்பு நீதி இங்கு பொங்கிடட்டும்.

— திராட்சையூரான் —


அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும் பொருள்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு
நாடவேண்டிய ஒரே இடம்
ஜெகன் களஞ்சியம்
இல.475, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
அண்ணா அரிசி மா
அண்ணா கோப்பி
அண்ணா அப்பம் மா
அண்ணா பற்பொடி
அண்ணா தோசை மா
அண்ணா கறிமிளகாய்த் தூள்
★ குமரன் விபூதி
★ துர்க்கா பத்தி
சாயி சுகந்தா
★ ரோஸ் பத்தி
தேக ஆரோக்கியத்துக்குப் போசாக்கு நிறைந்த
ஜீவாகாரம்
ANNA
அண்ணா தொழிலகம்
இணுவில்.
குறிப்பு: 50 அண்ணா பற்பொடி வெற்றுக் கவர்களை உங்கள் வியாபாரியிடம் கொடுத்து ஒரு மணிப் பேர்சை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர் - 2009


அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்



இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்


## மாற்றம் மலர்ந்திடப் பாலே நீபொங்கு!

பயிர்செய்து உணர்வுதனைப் பாரினுக்கு அளிக்கின்ற
உயர்வுமிகு பணியினுக்கு உதவுகின்ற "உதயன்"தனை
நன்றியுடன் போற்றுகின்ற திருநாளாம் தைப்பொங்கல்!
இன்றுநலி வடைகின்ற உழவர்களின் வாழ்வினிலே
வளம்பெருக வழிபிறந்து வையகம் எங்கணுமே
உளம்நிறைந்து மக்களெல்லாம் உவகையுடன் வாழ்ந்திடவே
ஏற்றதொரு தீர்வுக்கு எல்லோரும் இசைகின்ற
மாற்றமது மலர்ந்திடவே பாலே நீ பொங்கு!

- நாயன்மார்கட்டு ரா.மகேந்திரதாஸன்


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

AMT MARKETERS

சுத்தமாகப் பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்,
அழகுசாதனப் பொருள்கள்,
பாடசாலை உபகரணங்கள் மற்றும் இதரப் பொருள்களை
நியாய விலையில் ஒரே கூரையின் கீழ் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றிட நாடவேண்டிய முதல் தர நிறுவனம்

AMT பல்பொருள் அங்காடி,
பருத்தித்துறை வீதி,
இருபாலைச் சந்தி, கோப்பாய்.
தொ.பே.இல.021 222 5784

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

Yaso Tex
Nelliyady
Specialist in Wedding Sarees
& Salwar Kamez
Main Street, Nelliyadi.

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,அன்பர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல்வாழ்த்துக்கள்

உலகின் எந்தப்பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும்
மற்றும் உள்ளூர்,வெளியூர் தொலைத்தொடர்பு வசதிகள்,லெமனேற்றிங்,பிறின்ரிங்,கிறபிக்ஸ் டிசைனிங்,
கணனி உதிரிப்பாகங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

விரைவான பணப் பரிமாற்றத்திற்கு
WESTERN UNION
மணி டிரான்ஸ்பர்
Money Master

சகல விதமான
SLT MAXtalk
SLT NetCard

Internet Call 7/=
இந்தியாவிற்கான அழைப்பு 10/=
ஐக்கிய அரபு நாடுகளுக்கு 35/=

கணணி சம்பந்தமான சகல பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
குறைந்த விலைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.
Warranty 1 & 3 Years With Servise

FedEx Express
நம்பகரமான துரிதசேவை

திருமுருகன் கொம்நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ. சங்கம் முன்பாக)

New Branch
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர் - 2009

# குடாநாட்டின் பழைமைகளை அடியோடு புறந்தள்ளி நமது வரலாற்றுப் பெருமைகளை மிதிக்கின்றோம்!

## அன்றைய வாழ்வியல்புகளை மீட்டுப் பார்போமா?...

சிறப்புக் கட்டுரை

யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பழைமைகள் பல இன்று வழக்கொழிந்துவிட்டன. சில மெல்ல மெல்ல வழக்கொழிந்தும் வருகின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் இயல்பெனப்படும். இருப்பினும் என்றும் குடாநாட்டு மக்களுக்குப் பெருமை தரக்கூடிய சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் சிறந்த வாழ்வியல்புகளையும் பேணி நடப்பது ஓர் இனத்தின் வரலாற்றுக் கடமை என்பதை மறந்துவிடலாகாது.



கேணி, சுமைதாங்கியுடன் ஆவுரஞ்சிக் கல் (படம்: உதயன் ஆவணக் காப்பகம்)

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை யாழ்ப்பாணத்து வீடுகள்தோறும் மோர், பழரசம், தேநீர் போன்ற நீராகாரங்களைப் பருகுவதற்கு மூக்குப் பேணிகளே பாவனையில் இருந்தன. அக்காலத்தில் குவளைகளில் வாய்வைத்து எவரும் நீராகாரத்தைக் கொள்வதில்லை. இது மிகச் சிறந்தவொரு சுகாதார நடைமுறையாக யாழ்ப்பாண மக்களால் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. தேநீர்ச்சாலைகளில்கூட மூக்குப்பேணிக் கலாசாரமே பேணப்பட்டது. இன்று மூக்குப்பேணிகளும் இல்லை. சுகாதாரமும் இல்லை என்ற நிலையையே குடாநாட்டில் அவதானிக்கமுடிகிறது.

**தயிர்கடையும் ஒலியும் இல்லை மத்துக்களும் இல்லை**

நாவலர் பெருமானது காலத்தில் யாழ்ப்பாண மக்கள் தமது இல்லங்களில் வாழைஇலையில் உணவருந்துவதையே வழமையாகக் கொண்டிருந்தனர். சில்வர் தட்டுக்கள் பாவனைக்கு வந்ததும் தினசரி வாழை இலையில் பகற்போசனம் அருந்தும் பழைமை மக்களிடையே வழக்கொழிந்து விட்டதென்றே கூறமுடியும். வாழை இலையில் உணவருந்துவதென்பதும் மிகச் சிறந்தவொரு சுகாதார நடைமுறையே என்பதில் ஐயப்பாடு எழ நியாய மில்லை.

யாழ்ப்பாண மக்கள் முழுக்க முழுக்க மோரையே நீராகாரமாகப் பருகிய காலம் ஒன்றிருந்தது. தத்தமது தேவைக்கென மக்கள் அனைத்து வீடுகள்தோறும் பசுக்களை வளர்த்தனர். வீடுகளில் அதிகாலையில் சர்சர் எனத் தயிர் கடையும் ஒலி கேட்பது தினசரி வழமையான ஒரு விடயமாகும். தயிர் கடைவதற்கு மத்துக்கள் பயன் பட்ட காலமும் இல்லாதொழிந்து விட்டது. இன்று மத்துக் களும் இல்லை. அந்தப் பழைமையான வாழ்வியலும் அஸ்தமித்து விட்டமையையே காணக்கூடியதாக உள்ளது.

**பெரிய எழுத்து மகாபாரதம்**

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குடாநாட்டில் ஆயிரக்கணக்கான சுருட்டுத் தொழிற்சாலைகள் இருந்துள்ளன. அவற்றில் பகல் முழுவதும் மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம் முதலிய இதிகாசங்களைப் படிக்கும் ஓசைநயம் கேட்டவண்ணமே இருக்கும். சுருட்டுத் தொழிலாளர்கள் பழைய இதிகாசங்களில் மிகுந்த



ஒரே கல்லில் வடிக்கப்பட்ட கற்தொட்டி (படம்: உதயன் ஆவணக் காப்பகம்)

புலமை உள்ளவர்களாக விளங்கினர். நான்கு பாகங்களைக் கொண்ட பெரிய எழுத்து மகாபாரதம், இராமாயணம் போன்ற நூல்கள் வீடுகள் தோறும் இருந்தன. அந்தப் பழைமையும் இப்போது பழங்கதையாகி விட்டமையையும் இன்று உணர முடிகின்றது.

**ஆவுரஞ்சிக் கற்கள் நடுவது பெரும் புண்ணியம்**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல ஆயிரக்கணக்கில் பசுக்கள் வளர்க்கப்பட்ட காலத்தில் மேய்ச்சலுக்காக தரவைகளிலும் வயற்பிரதேசங்களிலும் அவை அவிழ்த்து விடப்பட்ட காலம் ஒன்றிருந்தது.

(Xஆம் பக்கம் பார்க்க...)



செல்லப்பா நடராசா.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Dulux
"அதிகம் பூசலாம்"
"அதிகம் பாவிக்கலாம்"
AkzoNobel
Tomorrow's Answers Today
CIC தயாரிப்புகளான பெயின்ற் வகைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
இல.70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
சிவகுமாரன் என்ரபிறைஸ்
இல.75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும்
உள்ளங்களில் உவகை பொங்க
இல்லங்களில் வளமான வாழ்வு தங்க
மக்கள் வங்கியின்
பொங்கல் வாழ்த்துக்கள்
மழலைச் செல்வங்களுக்கு "இசுறு உதான"
கல்விச் சிறார்களுக்கு "சிசு உதான"
முதுமைப் பராயத்தினர்க்கு "பரிணத"
இளமைப் பராயத்தினர்க்கு "YES" "YES FUTURE STARS"
அதிர்ஷ்டங்களை அள்ளித்தரும் "வனிதா வாசனா"
உங்கள் வயதிற்கும், தேவைக்கும் பொருத்தமான விதத்தில் மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து வாழ்க்கையின் வெற்றிப் பாதைக்கு பிரவேசியுங்கள்
ஆரம்பக்கல்வியைத் தொடங்கும் சிறார்களுக்கான கணக்கினை ஆரம்பித்து மக்கள் வங்கியின் விசேட சலுகை ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்
மேலதிக விபரங்களுக்கு
அருகிலுள்ள மக்கள் வங்கியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர் - 2009

## எல்லோரும் இன்புற்றிருக்க தைமகள் வழி செய்யட்டும்

தமிழர் தம் வாழ்வின் தனித்துவத்தையும் மகத்துவத்தையும் பேணுவது பொங்கல் பண்டிகை - இயற்கையின் தலைவனாகிய சூரியனுக்கு நன்றி தெரிவித்து எடுக்கும் புனிதமான விழாவாக இது அமைகிறது. கங்குல் மறைந்து கதிரவன் எழுகின்றான். மங்கல மங்கையர் மஞ்சள், குங்குமம் நெற்றியில் திகழ, மாக்கோலமிட்டு கலை வண்ணத்தைக் காட்டிப் புத்தாடையணிந்து, புத்தடுப்பினிலே புத்துணர்வுடன் புதுப்பானையேற்றி புத்தரிசியிட்டு, பால் பொங்க, மக்கள் மனத்திலே மகிழ்வு பொங்க, மங்கலம் பொங்க, பொங்கலோ பொங்கல் என இவ்விழாவைக் கொண்டாடுவர். பொங்கல் முடிவுற்றதும் அதனைப் பகிர்ந்துண்ணும் தன்மை தமிழர் தம் பண்பாட்டை எடுத்தியம்பும். காளை அடக்குதல், வண்டில் சவாரி ஓட்டம் என்பன பழந்தமிழ் விளையாட்டுக்களாகும். பொங்கல் நன்னாளிலே குதூகலத்துடன் நடைபெறும் கிராமத்திய விளையாட்டுக்கள் தமிழர் தம் தனித்துவ உணர்வையும் வீரவுணர்வையும் பிரதிபலிக்கின்றதெனலாம். மறுநாள் நடைபெறும் பட்டிப் பொங்கலில் கோமாதாவை நீராட்டி, எருதுகளை ஏற்றிப் போற்றிப் பொங்கிவழிபடுகின்றோம். தை பிறந்தால் வழிபிறக்கும் என்பது பொதுமொழி. தமிழர் தம் வாழ்வில் இன்றைய காலம் பல அனர்த்தங்களுக்குட் பட்டு, வீடு இழந்து, உடைமைகளை இழந்து, அகதிகளாக ஆனால், சுதந்திர உணர்வுபொங்க வாழ வேண்டிய நிலைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். அத்தகைய சுதந்திர உணர்வுடன் மக்கள் மத்தியில் உதயமாகும் தை நன்னாள் நமது கல்வி, கலை, கலாசாரம், ஒற்றுமை என்பன சிறந்து வாழ்வு நிலை ஏற்பட்டு எல்லோரும் இன்புற்றிருக்க வழி செய்ய இறைவனை இறைஞ்சுவோமாக.



சிவஸ்ரீ-சோ.இ.பிரணதார்த்திகரக்குருக்கள்,
கோப்பாய்.

## உரிமை வாழ்வு பொங்க வேண்டும்...

முற்றத்திலே அழகாகக் கோலமிட்டு
மாவிலையும் தோரணமும் தொங்கவிட்டு
புதிதாக முன்றடுப்பை நாங்கள் செய்து
புதுப்பானை வைத்து நெருப்பு மூட்டி
விளைச்சலிலே நாம் பெற்ற புதிய நெல்லை
அரிசி ஆக்கி பொங்கிடுவோம் இந்த நாளில்!

அதிகாலை துயில் எழுந்து தலை நீராடி
புத்தாடை புனைந்து நாம் மகிழ்வுடனே
குடும்பமாக முற்றத்தில் ஒன்று கூடி
உதயதிசை நோக்கி நாங்கள் கைதொழுது
நல்விளைச்சல் வழங்குகின்ற கதிரோனுக்கு
நன்றிவிழா எடுக்கின்றோம் இந்த நாளில்!!

பொங்கலுக்கு வைத்த பானை பொங்கும்போது
மனங்களிலே உண்மை அன்பு பொங்கவேண்டும்
உள்ளத்தில் அமைதி, நீதி ஒன்று சேர
சமத்துவமும் மனிதமாண்பும் வளர வேண்டும்
அனுபவிக்கும் அடிமை வாழ்வு விலகிப் போக
உரிமை வாழ்வு கிட்ட வேண்டும் இந்த நாளில்!

இ.அ.அமலரட்ணம், யாழ்ப்பாணம்.
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர் - 2009

## பொங்கலே! நீயின்று மலர்கின்றாய்

மனங்கள் மரத்துப்போக
உரிமைகள் மறுக்கப்போக
உணர்வுகள் செத்துப்போக
உறவுகள் தொலைந்துபோக
கனவுகள் கரைந்து போக
கண்ணீரில் கரைந்தபடி
நாளைகளைத் தேடி
நாளும் அலைகின்றோம்
இந்த இலட்சணத்தில்
பொங்கலே நீயின்று
மலர்கின்றாய்!
புத்தரிசிப் பொங்கவிட
நட்டு வைத்த பயிர்களுக்கோ
உயிரில்லை!

கால் வயிற்றுக் கஞ்சிக்கே
இடர்ப்படுகையில்
புதுப்பானைக்கு எங்குபோவது?
இந்த இலட்சணத்தில்
பொங்கலே நீயின்று
மலர்கின்றாய்
வாழவும் முடியவில்லை
மீளவும் வழிகளில்லை
நடக்கின்ற பாதையெங்கும்
படர்ந்த முட்செடிகள்
இந்த இலட்சணத்தில்
பொங்கலே நீயின்று
மலர்கின்றாய்.

எஸ்.கனிதரன், சண்டிலிப்பாய்.

## தமிழர் திருநாள் தைப்பொங்கல் பெருநாள்

நெல் விளைச்சலுக்கு வேண்டிய சூரிய வெளிச்சத்தைத் தந்துதவிய சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாகக் கொண்டாடப் பெறும் தைப்பொங்கல், மிகச் சிறந்த ஒரு நல்விழாவாகும். 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு' என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருவாக்குப்படி இப்புண்ணிய பூமியில் நெல்லுற்பத்திக்குப் பேருதவி புரிந்த ஆதவனுக்குப் பொங்கிப் படைக்கும் பொங்கல் திருநாள் இது.



அதிகாலையில் எழுந்து நீராடி தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து சந்தியாவந்தனம் முடித்து சுவாமி தரிசனம் செய்து வீட்டுவாயிலில் முற்றத்தை மெழுகி மாக்கோலமிட்டு கும்பம் வைத்துக் குத்துவிளக்கேற்றி பொங்கல் விழா ஆரம்பிக்கப்படும்.

மூன்று கல் அடுப்பிலே மங்களகரமாகப் புதுப்பானையை வைத்துப் பசும்பாலும் தண்ணீரும் விட்டுப் பொங்கல் ஆரம்பமாகும். வாழைமரம், கமுகு, கரும்பு, நுங்கு முதலியவற்றுடன் தோரணம் கட்டி மாவிலை போட்டுக் கரும்பும் வைத்து வீடே மங்களகரமான அலங்காரத்துடன் காட்சியளிக்கும்.

வீட்டிலுள்ள சின்னஞ்சிறிசுகள் பொங்கல் விழாவைக் குதூகலத்துடன் கொண்டாடி பட்டாசு வெடித்தும் பூந்திரி கொளுத்தியும் மகிழ்வர்.

இனிப்பான சர்க்கரை, தேன், பால், கற்கண்டு, முந்திரியவற்றல், கஜு மற்றும் நெய் கலந்து "பொங்கலோ பொங்கல்" என்று பொங்கிப் படைத்து சூரியவழிபாடு மேற்கொள்ளப்படும் இந்தத் தைப்பொங்கல் விழா எமக்குத் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்றபடி கட்டியங்கூறி வாழ்த்தி வரவேற்றுக் கொண்டாடப்படுகின்றது. எப்போதும் நல்லதை நினைத்து நல்லதையே செய்து எமது உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருந்து நல்லபடி நம் வாழ்க்கையைத் தொடங்கும் விதத்தில் இந்தத் தைப்பொங்கல் விழா மிகச் சிறப்பானதாகக் கொண்டாடப்பெறுகிறது. அத்துடன் இந்த விழா மங்களம் நிறைந்த நல்ல சுகவாழ்வையும் சுபீட்சத்தையும் அமைதியையும் நிம்மதியையும் தரவேண்டுமென்று பெருவிருப்புடன் மக்கள் பொங்கிப் படைத்து எல்லோருக்கும் கொடுத்து உண்டு மகிழ்கின்றனர்.

ஆகவே இன்றைய தைப்பொங்கல் திருநாளில் எல்லாம் வல்ல இறைவனருளால் எல்லோருமே இன்புற்றிருக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து அவனருளாலே அவன்தாள் வணங்கி ஆனந்த மேலீட்டினால் இறும்பூதெய்தி இதயம் மகிழ்ந்திருப்போமாக.★★★★★★

*- சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் -*

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது இனிய தைப்பொங்கல்
நல் வாழ்த்துக்கள்.....
அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை
* பாலர்களுக்கான புத்தகங்கள்
* முன்பள்ளிச் செயல்நூல்கள்
* பாடசாலை உபகரணங்கள்
* ஆன்மீக நூல்கள்
* இந்திய சஞ்சிகைகள்
என்பனவற்றை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
அஷ்டலக்ஷமி புத்தகசாலை, 320, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தலைமையகம் அஷ்டலக்ஷமி பதிப்பகம் 41, கண்டி வீதி, கைதடி.
அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, 14, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

நண்பர்கள், அன்பர்கள்,
அனைவருக்கும் எமது
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
*உங்களுக்கு வேண்டிய அழகிய அசல் தங்க நகைகளை விருப்பத்திற்கேற்ற டிசைன்களில் வடிவமைத்துத் தருபவர்கள்.
*ஓடர் நகைகள் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
துர்க்கா நகைப்பூங்கா
71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
ஞான லக்ஷமி ஸ்ரோர்ஸ்
✶ விவசாய உள்ளீடுகள் விற்பனையாளர்
(உரம் - கிருமிநாசினிகள்)
* தரமான பொருள்கள்
* குறைந்த விலை
நம்பிக்கைக்கு உகந்த ஒரே இடம்
ஞான லக்ஷமி ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி,
(பெற்றோல் செற் அருகாமை)
நெல்லியடி, கரவெட்டி.
T.P.: 226 4497

நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்பைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட - இளைய தலை முறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிபிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட
யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்
எரிக்கணேஷ்
கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.
மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2486
கிளைகள்: பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம் இதயம் கனிந்த
பொங்கல் நல்வாழ்த்துக்கள்.
முதன் முதலில் வட பகுதியில்....!
* எம்புறோடிங் ரை
* பிறிண்டிங் ரை
* வீவிங் ரை
* எங்கிறேவிங் மொணிற்ற பச், பிறிபெக்ட் பச்
* மெடல்
* நினைவுக் கேடயங்கள்
* டிஜிற்றல் பிறிண்டிங், இறப்பர் ஸ்ராம்
* பிளாஸ்ரிக் I.C.
* ஸ்கிறீன் பிறிண்டிங்
என்பனவற்றைச் செய்துகொள்ள 18 வருட அனுபவமிக்க...!
எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
இல. 212, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 9607,
0777 110 610.
E.mail: jasotharan arts @ yahoo.Com
HEAD OFFICE:
No.40/2, PIRIWENA ROAD,
RATMALANA, SRI LANKA.
T.P.: 0718 270396,
0112736224.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர் - 2009






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தைப்பொங்கல் சிறப்புமலர் - 2009

# பயிர் வளத்தையும் காலக்கணிப்பையும் உணர்த்தும் தைப்பொங்கல்

தைமாதம் ஒளி விளங்கும் காலம்; மார்கழியில் இருந்த இருள் நீங்கும் காலம். பழந்தமிழ் நாட்டுக் காலக்கணிப்பைத் தெளிவாகத் தன் பாசுரங்களிலே ஆண்டாள் ஆவணப்படுத்தியுள்ளாள். மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளிலே பாவை நோன்பு தொடங்குவதைத் தன்னுடைய திருப்பாவையிலே குறிப்பிடும் ஆண்டாள் தன்னுடைய திருமொழியினை ''தையொரு திங்களும்....'' என்று தொடங்குகிறாள். மார்கழி மாதம் இருளும் பனியும் மிகுந்திருக்கும்போது அக்குளிரிலும் இருளிலும் உறைந்துவிடாமலும் சோர்ந்து விடாமலும் இருக்க வேண்டுமென்பதற்காகவே ஆண்டாள் ''எழுங்கள்! எழுங்கள்!'' என்று பெண்களையெல்லாம் எழுப்புகிறாள். பெண்கள் எழுந்தால் வீடே எழும்பி விடும். இக்குளிர் காலத்திலேயே யேசு பிறந்தார். ''குளிரும் பனியும் கொட்டிலிலே கோமகனும் தொட்டிலிலே'' என்றோரு பாடலுண்டு. இக்காலத்திலேயே ஒளிவிழாவினைக் கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள். ஒளி வேண்டி நிற்கின்ற மார்கழி மாதம் அகல, இருண்டு புகார் நிறைந்ததாக இருந்த வானம் தை மாதம் பிறக்க



ஒளியுடையதாக ஆகின்றது. இதனாலே தைமாதம் விழாக் கொண்டாடும் மாதமாக ஆகிவிட்டது.

தைமாத விழாவின் முக்கிய நிகழ்வு அம்மாத முதல் நாளிலே நடத்தப்படும் பொங்கல் விழாவாகும். இது பயிர் வளத் தின் ஒரு கூறாக அமைகிறது. தம்முடைய நிலம் விளைவதற்குக் காலாக இருந்த மழையினையும் பகலவனையும் நினைக்கும் நாளாக இது அமைகின்றது. மார்கழி மாதத்தில் மழை வேண்டிப் பாடுகிறார்கள் ஆண்டாளும் மாணிக்க வாசகரும்....

''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து''

என்று ஆண்டாள் பாடுகின்றாள். திங்கள் மும்மாரி பெய்து கிடைத்த பயிர் விளைவுக்கு சூரியனும் காலாகிறான். எனவே , ஒளி மிகுந்த தைமாதத் தொடக்கத்திலே பயிர் விளைவிற் கிடைத்த நெற்கதிரின் மணிகளிலே பொங்கலிட்டுத் தங்களுடைய நன்றியினைக் கடவுளர்க்குத் தெரிவிப்பதாக இவ்விழாக் கொண்டாடப்படுகிறது.

ஜப்பானிலும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி பொங்கல் பொங்கப்பட்டதாகவும்



பேராசிரியர் அ.சண்முகதாஸ், Ph.D.(Edinburgh)

நாம் பின்பற்றுகின்ற தைப்பொங்கலுடன் தொடர்புற்றதான பல வழக்கங்கள் கொண்டாட்டங்கள் அங்கும் பின்பற்றப் பட்டனவாகவும் ஜப்பானிய வரலாற் றிலிருந்து பேராசிரியர் சுசுமு ஓனோ பல தகவல்களைத் தந்துள்ளார்.

தைத்திங்களை ஒரு பெண்ணாக உருவகித்து ஒரு நவீன தமிழ் இலக்கியம் இயற்றப்பட்டது. கவியரசர் கண்ணதாசன் பாடிய 'தைப்பாவை' என்னும் நூலே அதுவாகும். ''மார்கழிக்குப் பெண்ணாக மாசிக்குத் தாயாகப், பேர்கொழிக்க வந்த பெட்டகமே தைப்பாவாய்'' என்று தொடங்கும் கவிஞர், தைத்திங்களை உழவர்களுடன் தொடர்புபடுத்திப் பாடுகிறார்.

''காளை மணியோசை களத்துமணி நெல்லோசை
வாழை இலையோசை வஞ்சியர்கை வளையோசை
தாழை மடலோசை தாயர்தயிர் மத்தோசை
கோழிக் குரலோசை குழிவயர்வாய்த் தேனோசை
ஆழி அலையோசை அத்தனையும் மங்கலமாய்
வாழிய பண்பாடும் மாயமொழி கேட்டிலையோ
தோழியர் கைதாங்கத் தூக்கியபொன் அடிநோக
மேழியர்தம் இல்லத்து மேலெழுவாய் தைப்பாவாய்''

உழவர்தம் இல்லங்களுக்கு மேலே எழும்படியாகத் தைப்பாவையை வேண்டுகிறார் கவிஞர். தைப்பொங்கல் நமக்கு வள உணர்வினை, வரலாற்று உணர்வினை, பண்பாட்டு உணர்வினை, சமய உணர்வினை, அழகு உணர்வினை ஊட்டுகின்ற ஒரு விழாவாக அமைகின்றது. *******













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர் - 2009


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**அஜந்தாஸ்**
**ரெக்ஸ்ரைல்ஸ்**

புத்தம் புதிய ஆடைத்
தெரிவுகளை நித்தம் நித்தம்
அறிமுகம் செய்யும்
ஸ்தாபனம்
54, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
25,04, குறுக்குத்தெரு,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.


## தோழனாய் வழியொன்று காட்டத்
## "தோன்றிடு தைத்திரு நாளே"

வாழ்வது சிறக்க நாளும்
வயலையே நம்பி வாழ்ந்தான்
பாழ்பட்டநிஷா புயலால்
பரிதவிப் புடனே நிற்கும்
ஏழைவிவ சாயி வாழ்வில்
ஏற்றமே பெற்று வாழ
தோழனாய் வழியொன் றுகாட்டத்
தோன்றிடு தைத்திரு நாளே

- வ.யோகானந்தசிவம்

## அமைதியும் நிம்மதியும்

"தைபிறந்தால் வழி பிறக்கும்" என்ற மலர்
தைத்திங்கள் முதல் நாளில் மலர்ந்திருக்கும்
வையத்துள் வாழ்வுமலர் மலர்ந்து மணம்வீச
வேண்டுவன அமைதியும் நிம்மதியும் - அதற்காய்
பொய்யும் பகையிருளும் போயகல
புவியெங்கும் அன்புமழை பொழிய
தெய்வத்தின் திருவருளை வேண்டி நாம்
தைப் பொங்கல் திருநாளில் வழிபடுவோம்

-குளப்பிட்டி க.அருமைநாயகம்.


அன்பர்கள், நண்பர்கள், அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**மானிப்பாய் கோவில் பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

* நுகர்ச்சிச் சேவை
* கிராமிய வங்கிச் சேவை
* எரிபொருள் நிரப்பு நிலைய சேவை
* கட்டட மூலப் பொருள் சேவை
* விநியோக சேவை
* விவசாய சேவை



**கூட்டுறவு நகர்**
**நவீன விற்பனை**
**நிலையம்**

உள்ளூர் தொலைபேசி இல: 021 222 2756
வெளியூர் தொலைபேசி இல: 0094 - 212222756

* கதிரை, பந்தல், வாடகை சேவை
* தொலைத் தொடர்புச் சேவை
* சர்வதேச தொலைத் தொடர்புச் சேவை
* கூட்டுறவுக் கல்விச் சேவை



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது இனிய
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்.....

**அருண் அழகுமாடம்**
**அன்**
**புடைவையகம்**

அலங்காரப் பொருள்கள், சிறியோர்
பெரியோர்களுக்கான சாறிவகைகளையும்
றெடிமேட் ஆடைவகைகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
**பிரதான வீதி, நெல்லியடி.**



அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**NEW MEDICAL CENTRE**
**நியூ மெடிக்கல் சென்ரர்**

* விசேட வைத்திய நிபுணர்களின் சேவைகள்
* ECG, ஸ்கான் (SCAN) நவீன பிரதிகளுடன்
* சகல விதமான இரத்த, சல பரிசோதனைகள் (COLOMBO)
* வெளிநோயாளர் பிரிவு (OPD)

(காலை 8 மணி - மாலை 6.30 மணிவரை)
**பிரதான வீதி, நெல்லிடி.**

T.P.: 0602210750
* நவீன வசதிகளுடன் கூடிய சத்திர சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.



அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

**ஈஸ்வர பாமினி**
**ESWARA BAMINI**
Nagai poonka
**நகைப்பூங்கா**

இல.09, ஆலடிச்சந்தி, மானிப்பாய், (யாழ்.வீதி). உரிமையாளர்: ஈஸ்வரன் [சந்திரன்]



அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

SUNDHARSON
Jaffna Road Manipay

**சுந்தர்சன்**
**மானிப்பாய்**

உங்கள் மின் உபகரணங்களின் தேவையை தமது சேவையாக நிவர்த்தி செய்பவர்கள்.

1) காலத்தின் தேவையறிந்து மின் குமிழ்களின் பாவனையின்போது அறவிடப்படும் கட்டணத்தை 30 % முதல் 60 % வரை குறைக்கக் கூடிய "சக்தி சேமிப்புக் குமிழ்களை (Energy Saving Bulbs) விசேட விலைக்கழிவுடன் 20 மாதங்கள் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

2) அதிநவீன வகை, வகையான அழகுற அமைக்கப்பட்ட தொங்கு விளக்குகள் (Chandiliers), சுவர் விளக்குகள் (Wall Lamps), Hood Lights, மேசை விளக்குகள், சாஜர் விளக்குகள் (Charger Lights), கேற் லாம்புகள் (Gate Lamps).

3)மின் விசிறிகள், மின்கேற்றில்கள், றைஸ்குக்கர்கள் (Rice Cookers), ரோஸ்ரர்கள் (Toasters), மின் அழுத்திகள் (Iron Boxes), மின் அரைக்கும் உபகரணம் (Blenders), குடிநீர் சுத்திகரிப்பு ஆளி (Water Filter), நீர் சுடவைக்கும் சுருள் (Water Heater), C.D., D.V.D Players, ஒவன் (Oven), L.G T.V., குளிர்சாதனப்பெட்டி (L.G.Fridge)

4)P.V.C. நீர்க்குழாய்கள், அதன் இணைப்புகள், நீர்த்தாங்கிகள், மின் மோட்டார் பம்புகள், P.V.C., கூரைப்பீலிகள், அவற்றிற்கான இணைப்புகள், P.V.C. கதவுகள்/நிலைகள்.

5) மின் இணைப்பிற்குத் தேவையான வயர், சுவிச்வகைகள், மின்சார அழைப்பு மணி, பிளக் வகைகள்,

இன்னும் பல பரிசில்கள் வழங்கக் கூடிய மின் உபகரணங்களை எமது காட்சி அறையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் நிதானமான விலையில் பெற்றுக்கொள்ள குடாநாட்டில் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.

**சுந்தர்சன்** யாழ். வீதி, மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர் - 2009

# பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக!

தைத்திங்கள் முதல்நாள், தமிழர் வீடெல்லாம் இன்பம் பொங்கும் இனிய தமிழ்த் திருவிழாவாகப் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. சேற்றில் உழைத்து ஞால மக்கள் அனைவருக்கும் சோற்றினைப் படைக்கும் உழவர் பெருமக்கள் உழைத்தவர்க்கும், உதவியவர்களுக்கும் நன்றியுரைக்கும் நன்மைப் பெருவிழா நாள் இதுவாகும். ஒருவகையில் உலகத்தவர் அனைவரும் அந்த உழவர் பெருமக்களுக்கு நன்றி உரைத்திட வேண்டிய உன்னத திருவிழா நாள்.

தை பிறந்தால் வழி பிறக்கும். அனைத்துயிர்களுக்கும் மூலப்பொருளாய் அமைவது இயற்கை. விஞ்ஞானத்திற்கு மின்சக்தி போல, காந்த சக்திபோல மனிதனுக்கு உயிரும் தேவை. உழைப்பும் தேவை. பூமியில் உருவாக்கப்பட்ட உணவு மனிதனுக்கு உணவாகவும், மழை மூலமாகத் தண்ணீராகவும் நடைமுறையில் பயன்படுகின்றது. உடல் வளர்ச்சிக்கும், உள வளர்ச்சிக்கும், ஆக்க வளர்ச்சிக்கும், மூளை வளர்ச்சிக்கும் அதுதான் மூலப்பொருளாக இருக்கின்றது. ஆக இயற்கையின் உதவியால் தான் மனிதனும் உயிர்வாழமுடிகிறது. ஏனைய உயிரினங்களும் உயிர்வாழமுடிகிறது. இந்த இயற்கைக்கு நன்றி செலுத்தி வழிபடும் நாள்தான் இத் தைத்திருநாள்.

இத் தைத்திருநாளில் அனைத்துள்ளங்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த ஆண்டு நல்ல ஆண்டாக, பசுமையான ஆண்டாக, பசியைப் போக்குகின்ற ஆண்டாக , நல்ல உள்ளமும், நல்ல செல்வமும், நல்ல எண்ணமும் தரும் ஆண்டாக மிளிர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.



தமிழரும் தமிழ்மொழியும் தரணியில் என்றும் தலை நிமிர்ந்து நின்றிட வேண்டும். தமிழ்மக்கள் எல்லாத் துறைகளிலும் சிறந்தோங்கிட வேண்டும் என்னும் உணர்வுடன் பாடுபடுவோம் என இந்நன்னாளில் அனைவரும் உறுதியேற்போமாக. அனைத்து உள்ளங்களிலும் அன்பு பொங்கட்டும், அமைதி தங்கட்டும் என ஆசீர்வதித்து முத்துமாரித் தாயின் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர், ஜே.பி
(சிவாச்சாரிய பீடாதிபதி - அகில உலக சைவக் குருமார் சம்மேளனம், பிரதம குரு - வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

# தை மகளே! நீ வருக

தையின் மகளே நீவருக வருக
இதயமதில் இன்பம் அள்ளித் தருக
நலன்கள் யாவும் இனிதே நிறைய
நாளும் சுபங்கள் சுமந்தே நீ வருக

மனைகள் தோறும் மங்கலதீபம் சுடர்விட
மாவிலைத் தோரணங்கள் வாசலிலே அசைந்தாட
மாக்கோலம் போட்ட குணதிசையில்
கதிரவன் வரவு கண்டு பொங்குவோம்
உரிமைப் பொங்கல் என்றே.

பொங்கும் இனிய மனங்களில்
என்றும் இனிமங்கலம் தங்கும்
பொருதும் போரும் மண்ணில் ஓயும்
சஞ்சலங்கள் தன்னில் விலகியே ஓடும்
சரித்திரம் மண்ணில் சுவடுகள் பதிக்கும்

ஆண்டுகள் பல வந்தே போகும்
அடிமை வாழ்வும் அகன்றே நீங்கும்
மீண்ட நிலமும் பலமே பெற
யாண்டும் பொங்குவோம் - ஒரு
யதார்த்தப் பொங்கல்

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
* சிறுவர் பெரியவர்களுக்கான
ஓமாலா சைக்கிள்களும்,
உதிரிப்பாகங்களும்
* சகலவிதமான மின்சாரப் பொருள்கள்
* வீட்டுப் பாவனைப் பொருள்கள்,
அழகுசாதனப் பொருள்கள்
* பாடசாலை உபகரணங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
அற்புதா ரேடிங் கொம்பனி
இல. 198, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தித்திக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Nokia, Sumsung, Sony Ericsion,
Motorola, Lg, Voda Fone
டயலொக்,
மேசைத் தொலைபேசிகள்
கையடக்கத் தொலைபேசிகள்
அனைத்தும் சிறந்த முறையில்
திருத்திக் கொடுக்கப்படும்
Vins Phone Shop
And Repairs
No.205, Kasthuriyar Road, Jaffna. T.P: 021 222 4112, 0776394519.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Manufacturers of Gold Jewels
கிருஷ்ணா நகை மாளிகை
கிளை நிறுவனம்:
கிருஷ்ணா அடகு கடை, Krishna Jewellary
370, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். இல.9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 5046

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Maithely Nagai Madam
மைதிலி நகைமாடம்
Yarl Maithily Jewellers
யாழ் மைதிலி ஜுவலர்ஸ்
யாழ்.மைதிலி ஜூவலர்ஸ்
தங்க நகை வியாபாரி
Ymj
89 V, Kasthuriyar Road, Jaffna.
Sea Street Colombo -11.

Digitized by Noolaham Foundation.

உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர் - 2009

# ....அவற்றில் எங்கள் பண்பாடுகளும் மிளிர்கின்றனவே!

(III பக்கத்தின் குடாநாட்டின் பழமைகளை யின் தொடர்ச்சி...)

மேய்ச்சலை முடித்துக் கொண்டு பசுக்கள் கூட்டம் கூட்டமாக வந்து ஒன்றுகூடிக் களைப்பாறும் இடங்களில் ஆவுரஞ்சிக் கற்ளை நடுவதைப் பெரும் புண்ணிய கருமங்களில் ஒன்றாகக் கருதிய மக்களும் அன்று நிறையவே வாழ்ந்துள்ளனர். பசுக்கள் தமது உடலில் ஏற்படக் கூடிய நமைச்சல், அரிப்பு, தினவைப் போக்கிக் கொள்ள இந்த ஆவுரஞ்சிக்கற்களைப் பெரிதும் நாடுபவையாக இருந்துள் என. இன்றும் சில இடங் களில் அத்தகைய ஆவுரஞ்சிக் கற்கள் பழைய புராதன சின்னங்களைப்போல உள்ளன. வீடுகள் தோறும் பசுக் களை வளர்த்த அந்தப் பழைமையையும் இன்று காண முடியவில்லை. ஆவுரஞ்சிக் கற்களை இன்றைய இளை ஞர்கள் அறியார். ஆவுரஞ்சிக் கற்கள் பொளி கல்லாலா னவை. உருளை வடிவில் ஓர் ஆள் உயர அமைப்பைக் கொண்டவை. இவற்றைப் பற்றி இன்றைய இளஞ்சந்ததியினருக்கு எதுவுமே தெரியாது எனலாம்.

**சுமைதாங்கிகள்**

சிவபூமி என யாழ்ப்பாணம் வர்ணிக்கப்பட்ட ஒரு காலத்தில் வீதிகள் தோறும் சுமைதாங்கிகளை அமைத் தலையும் மகா புண்ணிய கருமங்களில் ஒன்றாக மக்கள் கருதி வாழ்ந்துள்ளனர். மக்கள் தலைச்சுமையாகப் பண்டங்களைச் சந்தைப்படுத்த எடுத்துச் சென்ற அக்காலத்தில் பிறரது உதவியின்றிச் சுமைதாங்கிகளில் சுமைகளை நின்ற நிலையில் வைத்துவிட்டுக் களைப்பாறியபின் மீண்டும் அவற்றை எடுத்துச் செல்வதுண்டு. பழைமையான வாழ்வியல்பை ஞாபகமூட்டும் அரும்பொக்கிஷமாக நேற்றுவரை இருந்த இச்சின்னங்கள் யாவும் இருந்த இடமே தெரியாமல் இந்நாள்களில் அழிக்கப்பட்டு விட்டன.

**வில்லு வண்டில்கள்**

குடாநாட்டு மக்கள் அன்று பயணஞ் செல்வதற்கு ஆடம்பரமான வில்லு வண்டில்களையே பயன்படுத்தினர். பயணிப்பவர்கள் சிறப்பான மெத்தை ஆசனத்தில் உட்புறம் கால்களைச் சௌகரியமாக வைத்துக் கொள்வதற்கு வசதியான வடிவமைப்பைக் கொண்டவை இவ்வில்லு வண்டில்கள். இணுவில் கிராமத்தில் 1913 ஆம் ஆண்டில் சேர் பொன். இராமநாதன் அவர்கள் மகளிர் கல்லூரி ஒன்றை ஆரம்பித்த ஆரம்பகாலத்தில் மிகமிக வசதிபடைத்தவர்களின் பிள்ளைகள் குதிரைகள், காங்கேயன் வெள்ளைக்காளை கள் பூட்டிய வில்லு வண்டில்களிலேயே பாடசாலைக்குச் சென்று திரும்பினர். புதுமணத் தம்பதிகளும் குதிரைகள் பூட்டிய வில்லு வண்டிலில் ஊர்வலம் வந்ததை யான் அவதானித்தது உண்டு. பென்ஸ் மோட்டார் வாகனத்துக்குச் சமமானவை எனக் கூறத்தக்க இத்தகைய வில்லு வண்டிகளுள் ஒன்று புகழ்பூத்த சைவப் பிரசங்கியாரான திரு.சிவசண்முக மூர்த்தியின் இல்லத்தில் அரும்பெரும் பொக்கிஷமாக இன்றும் பேணிப்பாது காக்கப்பட்டு வருகின்றது, வேறு எங்கும் இன்று அதைப்போல ஒன்றைக் காண முடியாது. பழமையைப் பேணும் திரு.சிவசண்முகமூர்த்தி பாராட்டுதல்களுக்குரியவர்.

**வெற்றிலைத் தட்டங்கள்**

சைவத் தமிழ் மக்களின் இல்லங்களில் வெற்றிலைத் தட்டங்களின் பாவனை தினசரி இருந்த காலம் ஒன்றிருந்தது. வீட்டிற்கு வரும் எந்த விருந்தினரையும் முதலில் வெற்றிலை கொடுத்து உபசரிப்பது அந்தக்கால மக்களது வாழ்வியல்புகளில் ஒன்றாகும். பித்தளையிலான வெற்றிலைத் தட்டங்கள் அனைத்தும் அழகிய வேலைப்பாடுகளைக் கொண்டவை. இவற்றுள் முக்கோணமாக கால்கள் பூட்டிய தட்டங்கள் மிகவும் பிரசித்தமானவை. மணமகனுக்கோ, மணமகளுக்கோ அல்லது வளர்ந்துவிட்ட மங்கை ஒருத்திக்கோ பால் அறுகு வைத்து நீராட்டும் வைபவங்களின்போது கால் தட்டங்களின் தேவை பெரிதும் உணரப்படுவதுண்டு. இன்றுகூட ஜனாதிபதி, பிரதமர் போன்ற பிரமுகர்களைக் கிராமத்துச் சிங்கள மக்கள் கைநிறைய வெற்றிலை கொடுத்து வரவேற்பதைக் காணலாம். இந்த வாழ்வியல் பும் பழமையும் தமிழ் மக்களிடையே மங்கி வருவதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

**கொத்துக்கள், பறைகள்**

குடாநாட்டு மக்கள் அனைவரும் கமக்காரர்களாக இருந்த ஒருகாலத்தில் நெல், குரக்கன், தினை, வரகு போன்ற தானிய வகைகளைக் கொத்துக் கணக்காகவுமே பறைக்கணக்காவுமே அளவை செய்தனர். இருபத்து நான்கு கொத்து ஒருபறை எனப்பட்டது. பறைதட்டி சரியாக ஆறு கொத்துக் கொள்ளக் கூடிய கைப்பிடிகள் கொண்ட மரப்பெட்டிகள் அதாவது பறைகள் அந்நாள் களில் வீடுகள் தோறும் இருந்தன. தினை விளைவித்தவர் களிடம் ஒருபறை அல்லது அரைப்பறை தினை தரமுடியுமோ என உசாவுவதுதான் நுகர்வோரது அக்கால வழக்கமாகும். இன்று அந்தப் பழமையும் குடாநாட்டில் அற்றுப்போய் விட்டது. இன்றைய கிராமத்து வீடுகளில் கொத்துக்களையோ, பறைகளையோ பார்க்க முடியாது.

**பத்தாயங்கள்**

பண்டையகால மக்கள் தாம் விளைவித்த தானிய வகைகளைப் பத்தாயங்களில் சேமித்து வைத்தனர். பழமை வாய்ந்தவற்றுள் ஒன்றான பத்தாயங்களின் பாவனையும் இல்லாதொழிந்துவிட்டது.

**கோர்க்காலிகள்**

குடாநாட்டில் வழக்கொழிந்து போனவற்றுள் இன்னொன்று கோர்க்காலிகளாகும். கிராம மக்கள் பனைஓலையினால் வேயப்பட்ட தமது வீடுகளில் கோர்க்காலிகளை அமைத்து அவற்றின்மேல் கறையான் பிடிக்காத வண்ணம் தானிய, ஓடியற் கூடைகளை வைத்தும் பாதுகாத்தனர். கோர்க்காலிகளின்கீழ் மணல்பரப்பி இராசவள்ளி, கொம்புவள்ளி, சிறு கிழங்கு வகைகளைச் சேமிப்பில் வைத்தனர். இன்று கோர்க்காலிகளின் தேவையே இல்லாமல்போய் விட்டது பாருங்களேன்!

**துலாவின் துணை கொண்டு.....**

துலாவின் துணைகொண்டு யாழ்ப்பாணத்தில் நீர்ப்பாசனம் நடைபெற்ற காலத்தில் துலா, நெஞ்பு (பழுமாஆப்பு), அச்சுலக்கை, பேண், கொண்டோடி (துலாவையும் கொடியையும் பிணைக்கும் கயிறு) பட்டை, பட்டைப்பல் என்பவற்றின் பதப் பிரயோகத்தை எதுவென்று அனைவரும் அறிந்திருந்தனர். இவற்றின் பதப் பிரயோகங்களை இன்றை இளைய தலைமுறையினர் அறிந்திருக்க நியாயமே இல்லை. துலாவின் பாவனையையும் இன்று காணமுடியவில்லை.

**கலப்பைகள், அட்டாளைகள்**

அன்றைய நாள்களில் சமநிலங்கள் அனைத்தும் எருதுகளின் துணைகொண்டு கலப்பையால் உழவு செய்யப்பட்டன. பழமை வாய்ந்த கலப்பைகளும் இன்று தீவிர பாவனையிலிருந்து அகன்று விட்டன. கமங்களில் அட்டாளைகளின் உபயோகத்தையும் இன்றுகாண முடியவில்லை. அட்டாளைகள் கமங்களில் இடத்துக்கிடம் நகர்த்தக் கூடியவை. பகலில் ஓய்வெடுக்கவும் உணவருந்தவும் பெரிதும் உதவுபவை. பனை ஓலைகளால் வேயப்படுவதால் குளிர்ச்சிமிக்கவை. உழவாரம், புல்லுச் சத்தகம், கத்தி, மண்வெட்டி, தேநீர்ப் பாத்திரங்களின் இருப்பிடமாகவும் அட்டாளைகள் பேணப்படுவதுண்டு. கமங்களில் இராக்காவலுக்கு அட்டாளைகளிலேயே கமக்காரர்கள் தங்கி இருப்பர். அட்டாளைகளில் பனை மட்டைகளால் வரியப்பட்ட மேல்மட்டத் தடுக்கானது நித்திரை செய்வதற்கும் உகந்ததாகும். இத்தகைய அட்டாளைகள் இன்று எங்கேபோய் ஒழிந்து கொண்டுள்ளனவோ என்று தெரியவில்லை.

**வல்லுவங்கள்**

வல்லுவம்எனப்படும் துணியிலான காசுப்பைகள் அந்தக்கால வியாபாரிகளிடம் பாவனையிலிருந்தன. நாணயக்குற்றிகளை நடுப்பையில் போட்டு தாள்காசுகளை வேறாக வைக்கக் கூடிய இவற்றைப் பாய்போலச் சுருட்டி அதிலுள்ள நாடாவால் சுற்றிக்கட்டி வேட்டி இடுப்பில் செருகிக்கொள்வது வியாபாரிகளது வழமை. வல்லுவம்களும் இன்று முற்று முழுதாக மறைந்துவிட்டன. வல்லுவம் என்ற சொல்லே இன்று பாவனையில் இல்லாமல் போய்விட்டது!

**கதிர்ப்பாய்கள்**

நான் சிறுவனாக இருந்த காலத்தில் 'அரிச்சந்திரன்' நாடகம் பார்த்தது இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது. நாடகம் நடைபெற்ற தோட்டவெளி முழுவதும் பெரிய கதிர்ப்பாய்களை ஆசனமாக விரித்திருந்தார்கள். கதிர்ப் பாயில் சௌகரியமாக இருந்து கொண்டு நாடகம் பார்த் தேன். நெல் சூடடிக்கவும், தினை, குரக்கன் கதிர்களைக் காயப்போடவும் மரவள்ளிச்சீவல்களைக் காயப்போடவும் அன்றைய கமக்காரர்கள் அனைவரும் மூன்று, நான்கு, ஐந்து என்ற கணக்கில் கதிர்ப்பாய்களை வைத்திருந்த பழைமையும் இன்று சரித்திரமாகி விட்டது. நீள்சதுரமான பெரிய படங்குகளை ஒத்தவை இக்கதிர்ப்பாய்கள். கதிர்ப்பாய்கள் என்பது காரணப்பெயராகும்.

**செப்புச் சல்லிகளும்**
**வெள்ளிக் காசுகளும்**

நாம் ஆங்கிலேயர்களின் ஆட்சியின்கீழ் இருந்த காலத்தில் 1/4, 1/2, 1 சத நாணயக்குற்றிகள் எல்லாம் செப்பு சல்லிகளாகவே பாவனையில் இருந்துள்ளன. 5, 10, 25, 50, 100 சதக்குற்றிகள் எல்லாம் வெள்ளியிலான காசுகளாகும். நான் அரிவரி வகுப்பில் படிக்கையில் பாடசாலை செல்வதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு அப்பாச்சி 1/2 சத செப்புக் காசொன்றைத் தந்துதவுவார். அந்தக் காலத்தில் 1/4 சதத்திற்கும் மிகப்பெறுமதி இருந்தது. 1/4 சதமோ, 1/2 சதமோ கொடுத்தால் கிழவி கடையில் அன்று சுண்டல் தருவார்கள். அந்தப் பழமை இனிமீளவே மீளாமல் மடிந்துபோய் விட்டது! 1/4 சத, 1/2 சத நாணயக் குற்றிகள் சிலவற்றை இன்றும் யான் மிகவும் பெறுமதியானவையாகப் பேணி வருகிறேன். இந்நாள்களில் 5, 10, 25, 50 சத நாணயக் குற்றிகள் எல்லாம் நாணயம் இழந்துவிட்ட நிலையே காணமுடிகிறது.

**பவுண் கணக்கு**

குடாநாட்டு மக்கள் பத்து ரூபாவை ஒரு பவுண் எனக் கணக்கிட்ட காலம் ஒன்றிருந்தது. அரச ஊழியர்களின் சம்பளங்களையும் அந்தக் காலத்தில் கிராம மக்கள் பவுண் கணக்கில்தான் மதிப்பிட்டனர். ஒரு கலியாணப் பேச்சின் போது மாப்பிள்ளைக்கு எத்தனை பவுண் சம்பளம் என்றுதான் கேட்பது வழமையும் பழமையுமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம் பத்தில் ஒரு தங்கப் பவுணின் பெறுமதி யும் பத்து ரூபாவாக இருந்ததாக முதியவர்கள் கூற யான் கேள்விப் பட்டிருக்கிறேன். இந்தப் பழைமையை இன்றைய இளைய தலைமுறையினர் யாவரும் நம்பித்தான் ஆகவேண்டும்.

**கோயில் மரியாதை**

பெரியவர்களை குறிப்பாக நாவலரை சமயப்பிரமுகர்களை கொடி, குடை, ஆலவட்டம், சங்கு, சேமக்கலம், மேளதாளங்களுடன் ஊர்வலமாகக் கோயில் மரியாதைகளுடன் ஒரு வைபத்திற்கு அழைத்துவரும் பழைமையையும் இன்று குடாநாட்டில் காணமுடிய வில்லை. இந்தப் பழைமை சிங்களக் கிராமங்களில் இன்றும் போற் றிப் பாதுகாக்கப்படுவதை பல தடவை களில் அவதானித்ததுண்டு. இத்தகைய பழைமைகள் அனைத்தையும் புறந்தள் ளாது வரலாற்றுப் பெருமை மிக்கவை களைப் பேணிப்பாதுகாப்பது எமது கடமையாகும். ஓர் இனத்தின் பழைமை கள்தான் அதன் வரலாறுமாகும். ***


IIS இன் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

CROSS ROADS IN LIFE AFTER A/L'S...?

Education that's designed with your future in mind

edexcel INTERNATIONAL

BTEC

HND in Computing

HND in Qs

Above 90% of Students who have completed a HND is working at Managerial level or pursuing further Studies

Bachelor of Science(Hons)in Information Technology (BSc IT)from Middlesex University,UK

Bachelor of Science(Hons)in Quantity Surveying (BSc Qs)from University of Salford,UK

பல நூறு மாணவர்கள் பயணித்த வெற்றிப்பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்.

A/L தகைமையுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறி விடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc.(Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியை பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதி செய்கின்றது. இக்கற்கை நெறிகளை பூர்த்திசெய்துகொள்ளும் மாணவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான வசதிகளை IIS City Campus ஏற்படுத்திக்கொடுக்கின்றது.




New Batches start on 23.01.2009 at 10.00 am

IIS CITY CAMPUS
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk Web: www.iiscitycampus.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர் - 2009

## தைப்பொங்கல் பண்டிகையின் சிறப்பு



# தை பிறந்தால் வழி பிறக்கும்...

விவசாயத்தை வாழ்வாதாரப் பயிர்ச்செய்கையாகக் கொண்ட சமூகத்தில், செழிப்பும், மகிழ்ச்சியும், உரிய காலத்தில் பெய்யும் மழையிலும் வெய்யிலிலுமே தங்கியுள்ளது. மழை இல்லாமையும், கடும் மழையும் பயிர்கள் அழியக் காரணமாகின்றன. இது கடவுளின் நிகழ்வாக நம்பப்படுகிறது. சூரியனுக்கும், மழைக்கும் அதிபதியான இந்திரனை மகிழ்ச்சிப்படுத்துவது, பாரத விவசாய கலாசாரமாக உள்ளது. மக்களின் வணக்கத்துக்கு உரிய இந்திரன், "தானே பலசாலி" என மமதை கொண்டிருந்தான் எனத் தெய்வீகக் கதைகளில் சொல்லப்பட்டுள்ளது. இதை அறிந்த கிருஷ்ணர், இந்திரனுக்குப் பாடம் புகட்டுவதற்காக, இந்திரனை வணங்காமல், கோவர்த்தன மலையை வணங்குமாறு மாடு மேய்ப்பவர்களுக்குக் கூறினார். கோபங்கொண்ட இந்திரன், தன் பலத்தைக் காட்டுவதற்கு, இடி மின்னலுடன், பெரும் மழை பெய்ய மேகங்களுக்குக் கட்டளையிட்டான். எனினும், கோவர்த்தன மலையை, கிருஷ்ணன், தன் விரலில் தாங்கி மாடுகளையும், இடையர்களையும் காப்பாற்றி நின்றார். இதனால், இந்திரனின் எண்ணம் நிறைவேறவில்லை. மூன்று நாட்கள் தொடர்ந்த போராட்டம் கிருஷ்ணனின் பலத்தைக் காட்டியது. இதை உணர்ந்து இந்திரன் மன்னிப்புக் கேட்ட போதுதான், ஒரு முடிவு வந்தது. கிருஷ்ணர், இந்திரனுக்காகப் "போகிப் பண்டிகை" செய்யும்படி மக்களைக் கேட்டுக்கொண்டார். பொங்கல் பண்டிகை சூரிய பகவானுக்கும், வருண பகவானுக்கும் நன்றி தெரிவிப்பதற்கு கொண்டாடப்படுகிறது. "தைப்பொங்கல்" உழவர் திருநாளாகவும் அழைக்கப்படுகிறது.

மூலம்: பொங்கல் சம்பந்தமான, இந்து மதத்தவர்களின் பூர்வீகக் கதைகளில் ஒன்று.

---

ஆசிய சமூகங்களின் கலாசாரங்களில் காணப்படும் அடிப்படை ஒற்றுமையானது, விவசாய வளங்களையே மையமாகக் கொண்டுள்ளது. இத்தகைய தகவல்களைப் பகிர்ந்துகொள்வது, நாட்டில் வாழும் பல்வேறு இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் என நம்பலாமல்லவா...

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர் - 2009



## மிலேனியம் ரெட்ஸ்ரோரன்ட் & கெஸ்ட்கவுஸ்

10 ம் ஆண்டில் காலடி வைக்கிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

### பிறைட் றைஸ் வகைகள்
மரக்கறி
மிக்ஸ் வெஜிட்டபிள்
முட்டை
சிக்கன்
இறால்
மட்டின்
பிவ் [F]
ஸ்பெஷல் மிக்ஸ்

### கொத்து வகைகள்
சிக்கன்
மட்டின்
கணவாய்
இறால்
பிவ் [F]
முட்டை
மரக்கறி
ஸ்பெஷல் மிக்ஸ்

### E 99 டிஷஸ் வகைகள்
பொயில்ட் E 99
ஓம்லெட்
புல் I
ஹாப் ஜகுஸ பொயில்ட்
[F] பிறைட் E 99

### சூப் வகைகள்
மரக்கறி
முட்டை
சிக்கன் & முட்டை
இறால் & முட்டை
நண்டு & முட்டை
மட்டின்
மிக்ஸ் (ஸ்பெஷல்)

### பிரியாணி வகைகள்
சிக்கன்
மட்டின்
கணவாய்
இறால்
மரக்கறி
பிவ் [F]

### F பிறைட் டிஷஸ் வகைகள்
பிவ் [F]
சிக்கன்
இறால்
மட்டின்
கணவாய்
மரக்கறி
ஸ்பெஷல் மிக்ஸ்

### நூடில்ஸ் வகைகள்
மரக்கறி
மிக்ஸ் வெஜிடபிள்
முட்டை
சிக்கன்
இறால்
மட்டின்
பிவ் [F]
ஸ்பெஷல் மிக்ஸ் வெஜிடபிள்

### மிக்ஸ் & கறிடிஷஸ் வகைகள்
மட்டின்
சிக்கன்
இறால்
பிவ் [F]
கணவாய்

## MILLENNIUM GUEST HOUSE



AIR TICKETS BOOKING
JAFFNA
COLOMBO

MODERN ROOMS WITH A-C. AND T.P. FACILITIES

MEALS & RESTAURANT

70, இராமநாதன் வீதி, கலட்டி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org